# பண்பாட்டுமயமாக்கமும் முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களும்: சம்மாந்துறை பிரிவு இரண்டினை மையப்படுத்திய ஓர் சமூகவியல் ஆய்வு

**Nusrath Banu, M.**[117]

**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு சமூகமானது அதனுடைய பண்பாடுகள் மூலமே அடையாளப்படுத்தப்படுகிறது. அத்தகைய பண்பாடுகள், பாரம்பரிய சம்பிரதாயங்கள் காலமாற்றத்துடன் நவீனமயமாக்கம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு, இஸ்லாமிய மயமாக்கம், பூகோள மயமாக்கம் போன்ற காரணங்களால் தானும் மாறிவிடுவதனால் அப்பிரதேச மக்களுக்கு அது ஓர் சவாலாக மாறிவிடுகின்றது. இறுதியில் அப்பாரம்பரிய அம்சங்கள் மறைந்து எதிர்கால சந்ததியினர் அதுகுறித்து சிறிதேனும் அறியாத ஓர் சூழ்நிலையும் உருவாகும் துர்ப்பாக்கிய நிலைமையும் சாத்தியமாக முடியும். பொதுவாக வாழ்வியல் பண்பாடுகள் சமூக, பொருளாதார, சமய ரீதியில் இவ் ஆய்வுக் கட்டுரையில் நோக்கப்பட்டுள்ளது. இவற்றின் ஆரம்ப கால ஆரோக்கிய நிலைமையும் தற்கால இரங்கத்தக்க நிலையும் இங்கு விமர்சனக் கண்ணோட்டத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. நவீனத்தில் மோகம் கொண்டு தன்னிலை மறந்து தன்னின உயர்வு வாதத்தையும் மறந்து அயலினப்பற்று வாதத்தினால் மக்கள் நவீனத்துவ மோகம் கொண்டு தத்தமது தனித்துவத்தை இழந்து வாழ்ந்து வருகின்றனர். இதனால், இது சமூகவியல் ஆய்வுப்பரப்பில் முக்கியத்தும் பெறுகின்றது. இவை குறித்து பல ஆய்வுகள் துறைசார் அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய பண்பாட்டு அம்சங்கள் அதனுடைய பண்பாட்டு வடிவினை இழந்து வெறும் சம்பிரதாயத்துக்காக மேற்கொள்ளப்படும் வெறும் சடங்குகளாக மாறி வருகின்றன. இப் பண்பாடுகளை மதித்து பேணி வந்த ஆய்வுப் பிரதேச மக்களுக்கு இந்நிலை பெரும் சவாலாக அமைகின்றது. இளந் தலைமுறையினர் பெரும்பாலும் பாரம்பரியமான வாழ்வியல் பண்பாடுகளை ஒரு பொருட்டாகப் பாராது புறக்கணிக்கின்ற நிலையும் சாத்தியமாகியுள்ளது. புராதன வாழ்வியல் பண்பாடுகளில் காணப்படுகின்ற நன்மை தீமைகளை பகுத்தறியும் அளவிற்கு கூட பக்குவமற்ற நிலையினை மேற்கதேயே அந்நிய கலாசார மோகங்கள் ஏற்படுத்தி இருக்கின்றன என்பதும் கண்டறியப்பட்ட உண்மையாகும்.அதனால் சமூகத்தின் தனித்துவம் பாதிக்கப்படக் கூடிய அச்சுறுத்தலும் நிலவுகின்றது. இது சமூகவியல் பார்வையில் ஆய்வுக்குரிய விடயமாகும். இதனால் இவ் ஆய்வானது சம்மாந்துறைப் பிரதேசத்தில் நிலவிவந்த பாரம்பரிய வாழ்வியல் பண்பாட்டு அம்சங்களைக் கண்டறிவதுடன் அவை அருகியதால் தற்போது அம் மக்களால் எதிர் கொள்ளபபடுகின்ற சவால்கள் குறித்தும் அதற்குரிய முடிவுரைகள், விதந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளது.நோக்க மாதிரி எடுப்பு மூலம் 42 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு: நேர்காணல், இலக்குக் குழுக் கலந்துரையாடல், அவதானிப்பு முறைகள் மூலம் முதலாம் நிலைத் தரவுகளும், இரண்டாம் நிலைத் தரவுகளை சேகரிப்பதற்காக புத்தகங்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், பிரதேச செயலகத் தரவுகள் முதலானவை பயன்படுத்தப்பட்டுள்ளன.இறுதியாக இந்த ஆய்வின் முடிவில் கண்டறியப்பட்ட விடயம் என்னவெனில் வெறும் நாகரிகம் என்ற பெயரில் சுதேச வாழ்வியல் பண்பாடுகளை மக்கள் கைவிட்டு வருவதனால் அவர்கள் உளவியல், உடலியல், சுகாதார, சமூக ரீதியாக பல சவால்களை எதிர் நோக்குகின்றனர் என்பதும் அவைகளிலிருந்து மக்களை மீட்டதில் பல சிக்கல்கள் நிலவுகின்றன என்பதும் புலனாகின்றது. இந்த ஆய்வுக்கட்டுரையின் முடிவில் எதிர் கொள்ளப்படும் சவால்கள் விமர்சனக் கண்ணோட்டத்தில் நோக்கப்பட்டுள்ளதுடன் இறுதியில் சில தீர்வு நுட்ப முறைகளும் விதந்துரைக்கப்பட்டுள்ளன.

**பிரதான சொற்கள்:**: பண்பாடு, சம்பிரதாயம், கலாசாரம், பாரம்பரியம், நவீனத்துவம்

## 1) அறிமுகம்:

இலங்கை முஸ்லிம்கள் தனித்துவமாகவும், தமக்கே உரிய கலாச்சாரப் பாரம்பரியங்களுடனும், சீரும் சிறப்புடனும் செறிந்து வாழும் பிரதேசம் அம்பாறை மாவட்டமாகும். இலங்கையில் தென்கிழக்கு என அடையாளம் காணப்பட்ட இப்பிரதேசத்தில் முஸ்லிம் பெரும் குடிகள் செறிந்து வாழும் பல ஊர்கள் காணப்படுகின்றன. இவற்றுள் நீர் வளமும் நில வளமும் நிரம்பப்பெற்று சென்னல் விளையும் காணிகளால் சூழப்பட்ட, இயற்கையான அன்னையின் கொடைகளால் வளம் பெற்று பார் போற்றும் பதியாக சம்மாந்துறை தாயகம் விளங்குகிறது.

சமூக, பொருளாதரம், கலாச்சார அரசியல் பாரம்பரியங்களினால் பல நூற்றாண்டு காலமாகத் தனித்துவமான முறையில் தன்னை இனங்காட்டி வந்துள்ள இத்தாயகம் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்திற்கும், இனஒற்றுமைக்கும், ஏனைய கிராமங்களுக்கு முன்மாதிரியாக திகழ்ந்து வந்துள்ளது.கிழக்கு மாகாணத்தில், முஸ்லிம் பண்பாட்டு வட்டத்திற்குள் முதன்மைப் பேர் பெற்றுள்ள இவ்வூர் முஸ்லிம்,தமிழ் உறவாலும் வரலாறு படைத்துள்ளது.

To whom correspondence should be addressed: nimnusrathbanu1@gmail.com

[117] Assistant Lecturer, Department of Sociology, South Eastern University of Sri Lanka.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மொத்த வாழ்க்கை முறையே பண்பாடு எனப்படுகின்றது.மக்கள் தலைமுறை தலைமுறையாகக் குழுவாகச் சேர்ந்து கற்று வெளிப்படுத்திய நடத்தை முறைகளும், பழக்கவழக்கங்களும் மரபுகளும் சேர்ந்ததொரு தொகுதியே பண்பாடாகும். பொதுவாக அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்ட கருத்துக்களும் சமுதாய மரபுரிமையாக பெறப்பட்ட நம்பிக்கை, பழக்கவழக்கங்களும் அடங்கிய தொகுப்பபை பண்பாடு என வரையறுப்பர்**(Shukri,1986).**

''அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டவழக்கம் முதலானவையும் மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கவழக்கங்களும் அடங்கிய முழுத் தொகுதியே பண்பாடாகும்.'' (எடவர்ட் பர்னட் டைலர்) என்பவரின் புகழ் பெற்ற கருத்தாகும்.

பண்பாடானது கருத்துருவ நிலைப்பாடாகவும், பௌதீக நிலைப்பாடாகவும் காணப்படுகின்றது. கருத்துருவ நிலை என்பது விழுமியங்கள், உயர் வழக்குகள் ஆகியவற்றை குறிக்கும்.பௌதீக நிலைப்பட்டவை நடைமுறையும் கோட்பாடுமாகும். பண்பாடு என்பது குறிப்பிட்ட மக்கள் கூட்டம் தனது சமூக வரலாற்று வளர்ச்சியின் ஊடாக தோற்றுவித்துக் கொண்ட பௌதீக பொருட்கள், ஆத்மார்த்த கருத்துக்களும், மத நடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகியவற்றினதும் தொகுதியாகும் என பேராசிரியர் கா.சிவதம்பி குறிப்பிடுகின்றார்**(Saleem,1992).**

சுருக்கமாக கூறின், ஒரு வாழ்க்கை முறையின் ஒவ்வொரு அனுபவங்களும் அதனது பண்பாட்டு ஒழுங்குகளே என்று ஒரு பிரிவின் பாரம்பரியம் உருவாகின்றதோ, அன்றிலிருந்து அவனது பண்பாட்டு ஒழுங்குகளும் நடைமுறைக்கு வருகின்றன.அந்த வகையில், சம்மாந்துறை முஸ்லிம்களின் பண்பாட்டு பாரம்பரியம் நீண்ட வரலாற்றை கொண்டது. அதுபற்றி பேச வருகின்ற போது, தற்கால இஸ்லாமிய மயமாக்கம், நாகரீக தாக்கம் பற்றியும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

முஸ்லிம்கள் என்ற ஒழுங்கில் பார்க்கின்ற போது அதற்குத் தனியான, திட்டவட்டமான பண்பாட்டு ஒழுங்குகள் காணப்படுகின்றன. ஆனால் சம்மாந்துறை முஸ்லிம்களின் பண்பாட்டு ஒழுங்கிலே காணப்படுகின்ற சமய சம்பிரதாயங்களையும், பிரதேச தாக்கத்தையும் நாம் புறம்தள்ளி விட முடியாது என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும். அதாவது சம்மாந்துறை முஸ்லிம்களின் பண்பாட்டு வட்டத்துள் அவர்களது பிறப்பு தொடக்கம், இறப்பு வரையான வாழ்க்கை ஒழுங்குகளில் சட்ட ரீதியான சமய விதிகள் தொழிற்படுவதோடு பாரம்பரிய பிரதேச சமூகங்களின் பண்பாட்டுத் தாக்கம் தொழிற்படுவதையும் தவிர்க்க முடியாது.

எனவே, இவ்வாய்வினூடாக இஸ்லாமியமயமாக்கம், நவீனமயமாக்கக் காரணிகளால் துறையூர் மக்களின் வாழ்வியல் பண்பாடுகள் மாற்றம் கண்டதோடு அவை ஓர் சமூக மாற்றத்தையும் (Social Change) ஏற்படுத்தியிருக்கின்றன. எனவே, பாரம்பரிய பண்பாட்டை கண்டறிதல், பாரம்பரிய பண்பாடுகள் அருகிச் சென்றுள்ளமையினால் அப்பிரதேச மக்கள் எதிர் கொள்ளும் சவால்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன், அதற்கான தீர்வு நுட்பங்களும் இவ்வாய்வினூடாக முன்மொழியப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

பாரம்பரிய பண்பாடுகளுக்கு பெயர்போன சம்மாந்துறைப் பிரதேசத்தில் இஸ்லாமிய கருத்துக்களின் புத்துயிர்ப்பினாலும், நவீனமயமாக்கத்தினாலும் ஓர் சமுக மாற்றம் பண்பாட்டு ரீதியில் நிகழ்ந்துள்ளது.எனவே, இம்மாற்றம் பண்பாடுகளில் ஊறிப்போன சில மக்களுக்கு அவற்றை திடீரென ஏற்றுக்கொள்ள முடியாத நிலையினையும் சமூகத்தில் ஏற்படுத்தியுள்ளது. இதுவே, ஆய்வுப் பிரச்சனையாகும்.

**ஆய்வு நோக்கம்**

நவீனமயமாக்கம், இஸ்லாமிய புத்துயிர்க் கருத்துக்களின் பின்னர் ஏற்பட்ட சமூக மாற்றத்தையடுத்து பாரம்பரியத்திற்கு பெயர்போன சம்மாந்துறைப் பிரதேச மக்களின்

- வாழ்வியல் சமூகப் பண்பாடுகள் எவ்வாறாக மாற்றமடைந்துள்ளன?,
- அதனால் அம் மக்கள் எதிர் கொள்ளும் சவால்கள் என்ன?

என்வற்றினைக் கண்டறிவதே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுப் பிரதேசம்**

இலங்கை கிழக்கு மாகாணத்தின் அம்பாரை மாவட்டத்தில் சம்மாந்துறை பிரதேசமானது 7 பாகை 22கலை வடக்கு 81 பாகை 48 கலையுடன் வங்காள விரிகுடாவிலிருந்து 4.8 Km தூரத்தில் அமைந்துள்ளது. இங்கு 484 குடும்பங்களும் 60 601 மொத்த சனத்தொகையும் காணப்படுகின்றது. இப்பழம் பெரும்பகுதி வடக்குத் தெற்காக நீண்டு, பரந்து காணப்படும் மட்டக்களப்பு வாவியின் தென் கோடியில் 'அல்லை' என அழைக்கப்படும் சதுப்பு நிலத்தையும், சேகுவப்பற்று என்றழைக்கப்படும் வயற்காணிகளையும் வடயெல்லையாகக் கொண்டமைந்து காணப்படுகின்றது.

இங்கு உள்ளூரளவில் தொழில்படும் அரச சார்பற்ற இயக்கங்கள் 182 காணப்படுகின்றது. அவற்றுள் 119 இயக்கங்கள் உயிரோட்டத்துடன் இயங்குகின்றன. அவற்றுள் Unisef, UNDP,Islami relief,Plan srilanka,SFCG போன்றவற்றைக் குறிப்பிடலாம். இங்கு கிராமியப் பெண்கள் அபிவிருத்தி நிலையமொன்று காணப்படுகின்றது. ஒரு இளைஞர் சங்கமும் காணப்படுகின்றது. மேலும் தன்னார்வ சேவை சங்கம், பெண்கள் சங்கம், விவசாயிகள் நிறுவனம், MPCS ஒன்றும் காணப்படுகின்றது. சம்மாந்துறை எனும் எனது ஆய்வுப் பிரதேசத்தில் மொத்தமாக 823 ஆண்களும் 809 பெண்களும் காணப்படுகின்றனர்(http://lankainformation=sammanthurai).

**2) இலக்கிய மீளாய்வு**

ஆய்வு எனும் பாதையில் பயணிக்கத் தொடங்கும் ஆய்வாளனுக்கு இவக்கிய மீளாய்வு சிறந்ததோர் வழிகாட்டியாக ஆய்வாளனின் பயணப்பாதையை சீர்படுத்திக் கொடுக்கின்றது அந்த வகையில் இவ் ஆய்வு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் உலகளாவிய மற்றும் இலங்கை தேசத்தில் இன்றும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றது.

**(S.H.M.Jameel & Asiff Hussein. 2011)** தனது 'The Muslim Heritage of Eastern Sri Lanka' எனும் நூலில் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வரலாறு, அவர்களால் கொண்டாடப்படும் விழாக்கள், பாடப்படும் நாட்டார் இலக்கியம், அவர்களின் கலை, கட்டிடக்கலை, தற்கால பொருளாதார நிலைகள், ஆடை அமைப்பு, சமூக உறவுகள் என்பவற்றை கிழக்கிலங்கை மண்வாசைன மாறாது பண்பாட்டு ரீதியாக கூறி நிற்கின்றார்.

**(A.A.A.Shushtery. 1938)** தனது 'outlines of Islamic Culture' எனும் நூலினூடாக இஸ்லாத்தின் பார்வையில் பண்பாட்டை விளக்குகிறார். அதற்காக இஸ்லாத்தின் பரவல், அரசியல் பண்பாடு, இலக்கியம், கல்வி, பல்கலைக்கழகம், கலை, விஞ்ஞானம், கலாசாரம் என்பன இஸ்லாத்தின் பார்வையில் எவ்வாறு பண்பாட்டு மயமாகின்றன என்பதனை விளக்குகின்றார். அத்துடன் அவை அந்நிய கலாசார தாக்கங்களினால் சில பிரதேசங்களில் வியாபாகத் தன்மை பெற்று நிற்பதனையும் விமர்சிக்கின்றார்.

**(Dr.M.A.M.Shukri.1986)** தனது நூலான 'ஆரளடைஅள ழுக ளுசடையமெய' வில் முஸ்லிம்களின் இலங்கை வருகை, சிறுபான்மையினரின் தனித்துவமான கலாசாரம், இஸ்லாமிய சட்டம், தலைமைத்துவம், தேசிய வாதமும், தனி இனக்குழும வாழ்வியல் பாரம்பரியம் போன்ற விடயங்களை பேசுகின்றார்.

**(Ismail R.AL-Faruri.1982)** தனது 'ஐளடயஅழை வுhழரபாவ யனெ ஊரடவரசந' எனும் நூலில் இஸ்லாமிய அடிப்படை எண்ணக்கருக்களான 'கலீமா', இஸ்லாமிய சட்டம், ஹஜ் எனும் புனித யாத்திரை,இஸ்லாமிய இலக்கியப் பண்பாடு முதலியவற்றை தனது பிரதேசக் கண்ணோட்டத்தில் விளக்கி நிற்கின்றார்

**(UMMA Formity,1997)** எனும் நிறுவனம்வெளியிட்ட 'Islamic Culture- A Few Angels' எனும் ஆய்வுத் தொகுப்பில் இஸ்லாமிய கலாசாரப் பண்பாடு என்றால் என்ன?, இஸ்லாமிய பண்பாட்டு அடிப்படைகளின் எதிர்பார்ப்புக்கள் என்ன? இஸ்லாத்திற்கும் பண்பாட்டுக்குமிடையிலான தொடர்புகள் என்ன என்பனவற்றை விளக்கம் செய்துள்ளார்.

**(Dr.Aboobacker Rameez.2015)** அவர்களின் ஆய்விலே மலாய் மக்களின் இனத்துவ அடையாளங்கள் இனத்துவம் தொடர்பான பொதுவான எண்ணக்கருக்கள்,இனத்துவ அடையாளங்கள் இலங்கை மலாயர்களின் தொடக்கம்,இருப்பு, உடலியல் பண்பு, மலாய் மொழி, வம்சாவழி, கலாசாரம், ஆடையமைப்பு, சமையல் குறிப்பு, திருமணவிடயம், இசை, நடனம், அவர்கள் அமைத்த மஸ்ஜித்கள், தனது அடையாளத்தை பேண எடுத்த முயற்சிகள் என பல்வேறு இனத்துவம் சார்ந்த விடயஙகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

**(MIM.Ameen .1870 - 195)** தனது இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும் எனும் நூலில் முஸ்லிம்களின் வரலாறும், குடிசனப் பரம்பல், கல்வி, இஸ்லாமிய சட்டம், சமய மரபு, அரபுத் தமிழ் பண்பாடு என்பதனை விளக்க (Rehana siki. 1995) தனது 'Women in Islamic culture and society' எனும் நூலினூடாக ஆசிய பண்பாட்டில், திருமணம், மணக்கொடை, விவாகரத்து, பெண்களின் வகிபங்கு என்பவற்றை பண்பாட்டு ரீதியில் கூறுகின்றார்.

**(A.M.Sameem. 1997)** தனது இஸ்லாமிய கலாசாரம் எனும் நூலில் உலக வரலாற்றில் முஸ்லிம்கள், இஸ்லாமிய பண்பாடு, முஸ்லிம்களின் கலைகள், பண்பாட்டு அம்சங்களை கூற (யு.ளு.யுடிரளளயஅயவா. 1995) தனது 'இஸ்லாமிய நோக்கு' நேக்கு எனும் நூலில் இறைத்தூதர் கண்ட இலக்கியம், சீறாப்பராணம், நாயகன்-நாயகி பாவனை, பண்பாட்டு வாழ்வியல் குறித்து கூறுகிறார். (கலாசார, நமய அலுவல்கள் அமைச்சு. 1997) வெளியிட்ட 'அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள்' எனும் நூலில் அம்பாரை முஸ்லிம்களின் வரலாற்றுப் பாராம்பரியம், வாழ்வியல் பண்பாடு, இனங்களுக்கிடையிலான நல்லுறவு, நாட்டார் பாடல், அறபுக் கலை பண்பாடு குறித்து தெளிவாக பேசுகிறார்.

**(ARM.Saleem. 1992)** தனது 'தனது கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கல்யாணக் சடங்கு' எனும் நூலில் மாப்பிள்ளை தேடல் தொடக்கம், பெண் பார்த்தல், தாலிகட்டல், 7 நாள் ஜீவனம், 6மாதச் சோறு, முதல் பேறு முதற் கொண்டு பேசுகிறார்.

இவ்வாறு, இவ் ஆய்வு தொடர்பான இலக்கியங்களின் மீளாய்வு நீண்டு செல்கின்றது என்பதற்கு மேறகுறித்த சான்றுகள் ஆதாரம் பகருகின்றன எனலாம். இவ்வாறு பல பிரதேசங்களில் பண்பாடு தொடர்பான ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டாலும் சம்மாந்துறைப் பிரதேசத்தில் இவ்வாய்வுக்கான இடைவெளி காணப்படுகின்றது. எனவே இவ்வாய்வு இடைவெளியினைப் பூரணப்படுத்துவதற்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

### 3) **ஆய்வு முறையியல்**

ஆய்வு நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு பண்பு ரீதியான ஆய்வு முறை (Qualitative research meathod) பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது ஒரு சமூக விஞ்ஞான ஆய்வு என்ற அடிப்படையில் கள ஆய்வு மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வு முதலாம் நிலைத் தரவுகளை பிலதான மூலகமாகவும் ஏனைய தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இங்கு நோக்க மாதிரி எடுப்பு உபயோகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. நேர்காானல், இலக்குக்குழு கலந்துரையாடல், அவதானம் என்பன மூலம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

ஆய்வுப் பிரதேசத்தின் 480 குடும்பங்களில் 10% இனை நேர்காணலுக்காக தெரிவு செய்ததில் கட்டமைக்கப்படாத வினாகத் தொகுதியினை உள்ளடங்கிய 48 நேர்காணலில் பின்வருவோர் இடம் பெற்றனர்.

பழைமை பேணும் சாதாரண பொது மக்கள்

புதுமையை விரும்பும் இளைய தலைமுறையினர்

விவசாயிகள்

சுதேச மருத்துவர்கள்

உத்தியோகத்தர்களும், கல்விமான்களும்

இரண்டாம் நிலை தரவுகளாக பிரதேச செயளாளர் அறிக்கை, பண்பாட்டுத் தொடர்பான சஞ்சிகைகள், பத்திரிகைகள், நூல்கள், இலத்திரினியல் வெளியீடுகள், இலக்கியக் கட்டுரைகள், புலமையாளர்களின் ஆக்கங்கள;(scolar Artical) மூலம் சேகரிக்கப்பட்டு ms -word மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**4) ஆய்வு முடிவுகளும் கலந்துரையாடல்களும்**

சம்மாந்துறைப் பிரதேசத்தில் ஆரம்ப காலங்களில் பல்வேறு வாழ்வியல் பண்பாட்டு அம்சங்கள் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றன. அவற்றை பின்வருமாறு வகைப்படுத்திக் நோக்கலாம்.

4.1 சமூகம் சார் பண்பாட்டு அம்சங்கள்

4.2 பொருளாதாரம் சார் பண்பாட்டு அம்சங்கள்

4.3 சமயம் சார் பண்பாட்டு அம்சங்கள்

4.1 சமூகம் சார் பண்பாட்டு அம்சங்கள்

இங்கு சில சமூகம் சார் பண்பாட்டு அம்சங்கள் தரவுகளின் அடிப்படையில் விளக்கப்படுகின்றன.

**பாரம்பரிய உணவு முறைகள்.**

1950ம் ஆண்டுக்கு முன்பு எம்மவர்கள் எல்லோரும் விறகடுப்பைத்தான் சமையலுக்குப் பாவித்தார்கள். மண் பானை சட்டிதான் சமையலுக்கான பாத்திரங்களாக பாவிக்கப்பட்டன. உற்பத்தியான நெல்லை கைக்குற்றலாக குற்றிய அரிசைத்தான் பாவித்தார்கள். சமைக்கும் போது அரிசியைக் கழுவும் நீரை ''களணி நீர்'' என்பார்கள். அக்களணி நீரை வீசி விடாமல் கறி சமைக்கும் போது இலக்கறி வகைகள், மீன் வகைகள் போன்றவைகளை சொதி காய்ச்சும் போது அதனுள் அரிசி கழுவிய இந்த கழுநீரை ஊற்றி சமைப்பார்கள். தேங்காய்ப்பால் ஊற்றமாட்டார்கள். தேங்காய்ப் பாலுக்கு பதிலாக இந்த களணி நீரைப் பாவிப்பார்கள். இறைச்சி மீன்களை சிவப்பு கறியாக கொச்சிக்காய்த் தூள் போட்டு சமைப்பதனால் மட்டும் தேங்காயைக் கீறி கட்டியாக எடுத்து அம்மியில் வைத்து அரைத்து எடுப்பதுடன் இஞ்சி, வெள்ளைப் பூண்டுகளையும் தனித்தனியாக அரைத்து கறி சமைப்பார்கள். தேங்காய்ப்பால் ஊற்றுவதில்லை. இந்த நடைமுறை இன்று முற்றாக மாறிவிட்டது.

எமது விவசாயிகள் வயல் வேலைகளின் போதும் சூடடிக்கும் போதும் ஆறு குளங்களில் மீன் பிடித்து அத்துடன் விப்பிலியங் காயையும் பிய்த்துக் கொண்டு வருவார்கள். மேலும் சிலர் பொன்னாங்கனி போன்ற பல வகை இலைக்கறிகளையும் ஆய்ந்து கொண்டு வருவதுடன் திராய் என்ற இலைக்கறிகளையும் வேருடன் பிடுங்கிக் கொண்டு வருவார்கள்.

மீன் கறியை பால் சொதியாகக் காய்ச்சி அதனுள் விப்பிலியங் காயையும் போடுவார்கள். கறி கொதித்து வரும்போது திராயை கொப்புடன் வேருடன் நன்றாகக் கழுவி கறிச்சட்டியில் போட்டு சிறிது நேரத்தில் சாப்பிடுவார்கள். திராய் கொப்புக் கொப்பாக எல்லோரும் பங்கிட்டு அதனை சாப்பிடுவது என்பது மறக்க முடியாத ஒரு தனிச் சுவைதான். மேலும் பொன்னான், தகரை, கீரை முதலானவை சமைக்கும் போது அதனுள் அவித்த உழுவை மீனை, விரால் மீனையும் சேர்த்து சமைக்கும் போது வேறு எந்தக் கறியும் தேவையில்லை நாலு அகப்பை கறியும் ஒரு அகப்பைச் சோறுமாக தின்னும் சாப்பாடே ஒரு தனி ரகம்தான்.

தூதுவளை இலையை ஆய்ந்து வந்து அதனை அம்மியில் வைத்து அரைத்து அதனுடன் கொச்சிக்காய், வெங்காயம், உப்பும் சேர்த்து அரைத்து கூனியை வறுத்து அதனுடன் சேர்த்து அரைத்து சோற்றுடன்

சேர்த்து சாப்பிடும் சுவையை நினைத்தால் நாவில் இன்றும் சுவை ஊறுகின்றது. கொக்கு, குருவி, காடை போன்றவைகளை கன்னி வைத்து பிடித்துத் தின்னும் காலமெல்லாம் எம்மைவிட்டு கடந்துவிட்டது. மான் மரை இறைச்சி எமது பிற்சந்ததிகளுக்கு மறந்து போன விடயமாகிவிட்டது.

பாரம்பரிய உணவு முறைகளில் மண்வாசைன கமழ்வதுடன் நோய்களும் அவற்றினால் ஏற்படுவதில்லை. உதாரணமாக அரைத்து ஆக்குதல் மரபு சம்மாந்துறையில் காணப்படுகின்றது. அதில் அரைப்பதற்காக மல்லி, சீரகம், மஞ்சள், இஞ்சி, காய்ந்த மிளகாய், மிளகு என்பவை சமைப்பதற்கு முன்நாளிரவு நீரில் ஊறவைக்கப்பட்டு பின்னர் அதிகாலையில் அரைக்கப்படுகின்றது. அதில் காணப்படும் மூலிகைகளினால் உடம்பில் கொழுப்பு சேர்மானம் சேமிக்கப்படாது செமித்து விடுவதாக இன்றைய விஞ்ஞான ஆய்வுகள் கூறுகின்றன. எனினும் தற்போது சம்மாந்துறைப் பிரதேச மக்கள் பெரும்பாலும் பரோட்டா, பேஸ்டி, இறைச்சி ரொட்டி மோகம் கொண்டு நோய்களை தனதாக்கிக் கொண்டுள்ளனர். இதனால் சக்கரை வியாதி, கொஸ்டிரோல், கேஸ்டிக் என மக்கள் நோயாளிகளாக மாறி வருகின்றனர். மேலும் இதுகாலம் வரை கேள்விப்படாத பல கொடிய நோய்களுக்கும் மக்கள் இலக்காகியுள்ளனர். By Pass, Canser போன்றவற்றை உதாரணமாக்கலாம்.

**தற்கால உணவுப் பழக்கம்.**

எனது ஆய்வுப் பிரதேச மக்களின் உணவுக் கலாசாரமானது மிகவும் தீவிரமான மாற்றத்தைக் கண்டுள்ளது. அறுசுவை உணவை இன்று வீடுகளில் சமைத்து உண்ணும் மரபு சென்று வரிசையில் நின்று வயிற்றையும், வாழ்வையும் கேள்விக்குறியாக்கும் உணவுகள் விரும்பி உண்ணப்படுகின்றன. நேர்காணல் மூலம் பெறப்பட்ட தகவல்களைப் பின்வருமாறு காட்டலாம்.

பெரும்பாலான வயது முதிர்ந்தவர்கள் நெல்லரிசிச் சோற்றையும், பாரம்பரிய உணவுகளையும் உண்ண விருப்பம் கொண்டு காணப்படுகின்றனர். எனினும் இன்றைய இளம் தலைமுறையினரும், சிறுவர்களும் அவ் உணவுகளைக் காரணம் இன்றியே அற்பமாக எண்ணுகின்றனர்.

எனது ஆய்வுப் பிரதேசத்தில் நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக துரித உணவுக் கடைகள், ஹோட்டல்கள் மழைக்கு காளான் முளைப்பது போல் முளைத்துக் கொண்டிருக்கின்றன. இவற்றை PHI முதலிய அதிகாரிகள் பரிசீலித்த முத்திரை குத்தியும் உள்ளனர். இக் கடைகளில் அனேகமான வாழ்க்கையாளர்கள் போளின் போட்டு நின்றதும் எம் மனக் கண்முன் வருகின்றது. நேர்காணலில் பெறப்பட்ட தரவுகளின்படி கடைகளில் இடம்பெறும் மனிதாபிமானமற்ற செயல்கள் மனச்சாட்சியினைத் தட்டி எழுப்பி விடுகின்றது.

மிக வேகமாக மக்கள் மத்தியில் பரவி இன்று மக்களின் சாதாரண உணவுத் தட்டுகளில் பரிமாறப்பட்டு வரும் ஒரு வகை உணவுதான் இன்றைய 'ப்ரெயிலர் கோழி இறைச்சியாகும்' வெறும் ஊசிகளாலும், மருந்துகளாலும் எடைக்காக மாத்திரம் வளர்க்கப்படும் புற்ற நோய் கலன்கள் நிறைந்த இறைச்சியாக இது காணப்படுகின்றது. இக் காலத்து சிறுர்களினால் இது விரும்பி சுவைத்து உண்ணப்படுகின்றது. பல்வேறுபட்ட வியாதிகளின் மூலமாக இது காணப்படுகின்றது. அனேகமான உணவுகளால் ''லொலிபப், சிக்கன் சிக்ஸ்டி பைவ்'' எனும் மோகப் பெயர்களால் மனிதர்களை ஆட்கொண்டுள்ளது. மேலும் மரவள்ளிக் கிழங்குப் பொரியல்களுக்குள் இரப்பர் துண்டுகள் சேர்க்கப்படுவதால் கேன்சர் ஏற்படுகின்றது.

பீஸா, பேர்கர், ஹொட் டோக், சிப்ஸ் என அனைத்திலும் கொழுப்பு மூலக்கூறுகள் நிறைந்து காணப்படுகின்றன. முகுஊஇநுகுஊ முதலிய உணவகங்கட்கு சென்று சாப்பிடுவதனை ஒரு பெருமைமிக்க விடயமாக கருதும் மனோநிலை இம்மக்களிடம் காணப்படுகின்றது. மேற்குறித்த உணவகங்களில் பரிமாறப்படும் அனேகமான உணவுகள் மிக எளிதில் நோயினை ஏற்படுத்தவல்லன. சிறுவர்கள் சொக்லெட், ஐஸ்கிறீம், டிப்டிப், பிஸ்கட் முதலிய உணவு வகைகளை அன்றாட உணவுகளில் சேர்த்த சேர்த்தவண்ணம் உள்ளனர். காலையில் குடிபானமாக னுயடைல அடைமஇ ஆடைழ வினை தொடர்ந்து உள்ளெடுக்கும்

பிள்ளைகளினையும் காணக்கூடியதாயுள்ளது. இது எதிர் காலத்தின் தலைவர்களின் சிறந்த ஆரேக்கியத்திற்கு பங்கம் விளைவிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

பெரும்பாலான உணவுப் பொருட்களில் இன்று ''சக்ரீன்'' எனும் பதார்த்தம் இனிப்புச் சுவைக்காக சேர்க்கப்படுகின்றது. இது உடலின் ஆரோக்கியத்திற்கு மிகவும் கேடு விளைவிக்கும் ஓர் பதார்த்தமாகும். மேலும் சுவைக்காக 'அஜினமோடோ' எனும் சவை நரம்புகளை தூண்டிவிடக்கூடிய பதார்த்தமும் சேர்க்கப்படுகின்றது. இது எலும்புகளினைப் பலவீனப்படுத்தக் கூடிய ஓர் பதார்த்தமாகும். ஆரம்பகாலங்களில் சிறு பைகளில் வாங்கப்பட்டு சிறிதளவில் சேர்க்கப்பட்ட அஜினமோடோ இன்று மூடை மூடையாக கடைகளின் மூலைகளில் வைக்கப்பட்டு அபரிமிதமான முறையில் உணவுப் பதார்த்தங்களில் சேர்க்கப்படுகின்றது. தற்காலத்தில் வயல்களில் வருகின்ற பீடைகளைக் கொல்லும் சிறந்த, வினைத்திறனான, செலவு குறைந்த பீடைக் கொல்லியாக இந்த அஜினமோடோ பயன்படுத்தப்படுவது ஓர் ஆச்சிரியமான விடயமாகும்.

· தற்போது புடிங், ஜெலி, ஐஸ்கிறீம் என்பன தேசிய ஆகாரம் எனும் செல்லப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டு அனேக வீடுகளில் செய்யப்படுகின்றது. இவை உடலுக்கு ஆரோக்கியத்தை ஈட்டித்தரும் உணவுகளல்ல என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். மேலும் திருமண உறவுகளின்போதும், பெருநாட்களிலும் விரும்பி உண்ணப்படும் உணவாக வட்டிலப்பம் முஸ்லிம்களின் விஷேட நாள் உணவாக அறியப்படும் அளவிற்கு பிரபல்யமானது. இதில் உள்ளீடாகப் பயன்படும் முட்டை, சக்கரை, வெனிலா, வாசனைத் திரவியங்கள், கொக்கோ பவுடர், மில்க் மெயிட் என்பன அதிகரித்த சீனி மற்றும் கொழுப்ப சக்தியினைக் கொண்டுள்ளன. எனினும் மனிதன் அறியாத நிலையில் இவை உடலினுள் சென்று பல்வேறு நாட்பட்ட குணப்படுத்த முடியாத நோய்களினை ஏற்படுத்தவல்லன என்பது மறுக்கமுடியாத ண்மையாகும்.

பொதுவாக உணவு உண்ணப்படுவது ஆரோக்கியமாக வாழ்வினை எடுத்துச் செல்வதற்காகும். எனினும் உணவின் மூலம் ஓர் மனிதனின் ஆரோக்கியம் கேள்விக்குள்ளாதல் என்பது எந்தவொரு பகுத்தறிவான மனிதனாலும் ஏற்றுக்கொள்ளமுடியாத ஓர் விடயமாகும். எனவே விட்டுத்தோட்டம் செய்தல், தன்னால் இயன்றவரை துரித உணவுகள், சோடா வகை முதலியவற்றை தவிர்த்துக் பெகாள்ளுதல், இயல்பான இயற்கையுடன் இணைந்த வாழ்க்கையினை பழகிக் கொள்ளல், உடற்பயிற்சி செய்தல், யோகா செய்தல் முதலியன ஆரோக்கியத்தின் தீர்வுகோலாகும். ஆரோக்கியமான சந்ததியினரை உருவாக்குவது எமது தலையாய கடமையாகும். இதற்கு ஆரோக்கியமான உணவினை உற்பத்தி செய்து ஒவ்வொரு தனியனுக்கும், அரசிற்கும் அடிப்படை என்றால் மிகையாகாது.

**வைத்திய நடைமுறைகள்**

அக்காலங்களில் ஆங்கில வைத்தியம் இங்கு நடைமுறையில் மிகவும் குறைவு நாட்டுப் பரிசாரிமார் என்பவர்கள்தான் அதிகமாக இருந்தார்கள்.

சித்தம்.

ஆயுர் வேதம்.

யூனானி.

ஹோமியோபதி.

அஸ்மா – குர்ஆன் வைத்தியம்.

மாந்திரீக வைத்தியம்.

என்ற வைத்திய முறைகள் இங்கு இருந்துள்ளன. சித்தம், ஆயுள் வேதம் தமிழ் வைத்தியர்களும், யூனானி, ஹோமியோபதி என்பன முஸ்லிம் வைத்தியர்களும் செய்து வந்தனர். எல்லா விதமான நோய்களுக்கும் இவ்வைத்தியர்களினால் வைத்தியம் செய்யப்பட்டன. மேலும் முஸ்லிம் வைத்தியர்களினால் அஸ்மா என்னும் குர்ஆனூடாக வைத்தியமும் நடைமுறையில் இருந்துள்ளன.

செம்புக்குடத்தில் பால் பார்த்தல், மைபார்த்தல், ராசி பார்த்தல், இசும் கட்டுதல், பீங்கான், பீரிசு பீரிசில் எழுதி கரைத்துக் குடித்தல், அச்சிரம் கட்டுதல் போன்ற வைத்திய முறைகளும் நிறைய செயல்படுத்தப்பட்டன.

தமிழ் வைத்தியர்கள் குறிபார்த்தல், மைபார்த்தல், கிரகம் பார்த்தல், கட்டுக்கட்டல் போன்ற வைத்திய முறைகளைக் கொண்டும் வைத்தியம் செய்தனர்.

இவ்வைத்தியர்களுக்கு தேவையான மருந்து மூலிகைகள் நிறையவே இங்கு மிக மலிவாக காணப்பட்டன. அவைகளைக் கொண்டு தூள் இடித்தல், குளிசை உறுட்டி எடுத்தல், ஊறல் போடுதல் போன்றவையும் எண்ணெய் காய்ச்சுதல் என்பன போன்ற பல வகையான எண்ணெய் வகைகளை பரிசாரிமார் தமது உதவியாளர்கள் மூலம் போத்தல் போன்றவைகளில் அடைத்து தயாராக கையிருப்பில் வைத்திருந்தனர். நோயை பரிசாரிமார் கைப்பிடித்தல் மூலம் அறிந்து கொள்வார்கள். தம்மிடம் தயாராக இருக்கும் குளிசை, தூள், எண்ணெய் என்பவைகளை கொடுப்பார்கள்.

மேலும், சில நோய்கள் மாந்திரீக முறையில் தீர்க்கப்பட்டன. பைத்தியம், மயக்கம், பிள்ளைப்பேறு போன்றன மாந்திரீக முறையில் தீர்க்கப்பட்டதாகவும் அறியக் கூடியதாகவும் இருக்கின்றது. பரிசாரத்தால் முடியாததை மாந்திரீகத்தால் செய்தார்கள். நாட்டு வைத்தியர்கள் வைத்தியம் மாத்திரம் செய்தார்கள். ஒரு சிலர் மாத்திரம் பரிசாரத்துடன் மாந்திரீகத்தையும் படித்திருந்தார்கள(Musthafa,2014).

**தற்கால நிலை**

தற்காலத்தில் மாற்றுவழி மருத்துவ முறைகளுக்கு எமது ஆய்வுப் பிரதேச மக்கள் அதிகளவான முக்கியத்துவத்தினை கொடுப்பதாகத் தெரியவில்லை. அனைவரும் அலோபதி எனப்படும் ஆங்கில மருத்துவத்தை நடைமுறைப் படுத்துபவர்களாகவே காணப்படுகின்றனர். மேலும் சில வயது முதிர்ந்தவர்கள் தமது நோய்கள், கைக் குழந்தைகளுக்கு அவ்வப்போது கை மருத்துவம் செய்யும் வழக்கம் காணப்படுகின்றது. உதாரணமாக கைக்குழந்தைகளுக்கு தடிமல், சளி ஏற்படும் போது துளசி, தூதுவளை முதலிய மூலிகைகளைக் கசக்கிப் பிழிந்து சாற்றினை கற்கன்டுடன் சேர்த்துப் பருக்குவர். மேலும் பெரியவர்களுக்கு தேங்காய் எண்ணையில் கற்பூரத்தை ஊறவிட்டு அக் கரைசலை நெஞ்சில் பூசுகின்றனர். இவை தவிர இன்னும் பல கை மருத்துவ முறைகள் இம் மக்களால் பேணப்பட்டு வருகின்றது. அவற்றைப் பின்வருமாறு பட்டியற் படுத்தலாம்.

- தொண்டை நோவிற்கு தேங்காய்த் துண்டுகளை நிறம் மாறும் வரை வறுத்து உண்டால் குணம் ஏற்படும்.
- தூக்கமின்றித் தவிப்பவர்கள் வெள்ளைப் பூண்டுப் பற்களை தலையணையின் கீழ் வைத்து உறங்கினால் நன்கு தூக்கம் வரும்.
- பல் வலிக்கு கொய்யா இலையினை உப்புப் போட்டு அவித்து வாயினை நன்கு சுத்தம் செய்கின்றனர்.
- தலையின் பொடுகு நீங்குவதற்கு வேப்பந்துளிர், மாதுளைத் துளிர், மதுரோண்டித் துளிர், கறிவேப்பிலைத் துளிர் முதலியவற்றைப் பன்னீருடன் சேர்த்து அரைத்து அரை மணி நேரம் தலையில் ஊற வைத்துக் குழிக்கின்றனர்.
- உடல் சூட்டினைத் தணிக்க நல்லெண்ணையில் வெள்ளைப் பூண்டினை இட்டு நன்கு காய்ச்சி பின் அவ் எண்ணையினை இரு கால்களின் பெரிவிரலில் பூசி 2 நிமிடத்தில் கழுவினால் உடல் சூடு தணியும். ஆதிக நேரம் வைத்திருப்பின் தடிமல், சளி உண்டாகும்.
- அம்மைத் தொற்றுக்கு வேப்பிலை, மஞ்சள், மாதுளந்துளிர் என்பவற்றை பன்னீர் கலந்து அரைத்துப் பூசுகின்றனர்.
- வயிற்றுப் போக்கைத் தடுப்பதற்காக கோப்பி விதையினை எடுத்து அரைத்து வடிகட்டி நீராகாரம் செய்து அருந்துகின்றனர்.
- தடிமல், தலைப்பாரம் முதலியவற்றுக்கு விக்ஸ் இலையினை நீரில் இட்டு அவித்து ஆவி பிடிக்கின்றனர்.

- நிம்மதியற்ற அரைகுறைத் தூக்கத்திலிருந்து விடபட தேங்காய் எண்ணையில் மருதோண்டிப் பூவினை இட்டு பூ சிவக்கும் வரை காய்ச்சி ஒரு போத்தலில் அவ் எண்ணையை பூவுடன் ஊற்றி ஊறவிட்டுத் தூங்கச் செல்லும் முன் தலையில் எண்ணையைத் தடவுகின்றனர்.
- உடல் எடையினைக் குறைப்பதற்காக சீரகத்தை நீரில் ஊறவிட்டு அந் நீரை அதிகாலையில் குடித்துவர உடல் எடை நாளடைவில் குறையும்.

இவ்வாறான சுதேச மருத்துவங்கள் இருந்தாலும் பெரும்பாலான மக்கள் இவற்றின் மூலம் சரியான சுகம் கிடைக்காத போது அங்கில மருத்துவத்தினையே சார்ந்த நிற்பதைக் காணக் கூடியதாக உள்ளது. மேலும் பரிசாரி வைத்தியம், மாந்திரித்தல் என்பனவும் முற்றாக நீங்கிப் போயிரப்பதனைக் காணலாம். எனினும் அவற்றில் அதீத நம்பிக்கை கொண்ட மக்கள் அவைகளில் ஈடுபடுவதாக மக்கள் கூறுகின்றனர்.

நாட்பபட்ட குணப்படுத்த முடியாத நோய்களுக்கு ஆளான மக்கள் கிளினிக்குக்காக வைத்திய சாலைக்கு செல்கின்றனர். அவை வருடா வருடம் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றது.

| வருடம் | DM | HTN | HD | CKD |
|---|---|---|---|---|
| 2017 | 21736 | 8302 | 1368 | 132 |
| 2016 | 18216 | 6414 | 686 | 66 |
| 2015 | 17312 | 5712 | 1121 | 41 |
| 2014 | 13336 | 2174 | 932 | |
| 2013 | 8381 | 3119 | 815 | |

(MOH Office Data,2017)

வைத்திய முறைமைகள் நோயின் காரணத்தினை நிவர்த்தி செய்து பூரண சுக தேகத்தை வழங்கக் கூடியதாக அமைய வேண்டும். எனினும் மக்களின் நோய்கள் சில சமயங்களில் இரட்டிப்பாவதாகவும் கூறுகின்றார்கள். அதாவது ஒரு நோய்க்கு மருத்துவம் செய்ய அது இன்னுமொரு நோயினை ஏற்படுத்தி விடும் நிலையினைக் காணலாம்.

இவ்வாறு அதிருப்தி அடைந்த நிலையியே மக்கள் காணப்படுவதாகத் தெரிகின்றது. எனினும் எமது நோயினை சரியாக இனங்கண்டு பரிபூரண நிவாரணத்தைப் பெற வேண்டும். எனும் அவா மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. இதற்கு சரியான விழிப்பூட்டல், மருத்துவ உத்தியோகத்தர்களின் ஆலோசனை என்பன இன்றியமையாதனவாகும்.

**விளையாட்டுக்களும் பொழுதுபோக்குகளும்**

1950ம் ஆண்டுக்கு முற்பட்ட காலங்களில் எமது ஊரில் விளையாட்டுக்களுக்குப் பஞ்சமில்லை. விவசாயப் பிரதேசமான எமதூரில் மானாவாரிப் போகம் மாத்திரம்தான் விவசாயம் செய்வார்கள். இதனால் வருடத்தில் எட்டு மாதங்கள் தொழிலற்றவர்களாக பொழுதுபோக்குகளுக்கு போதிய சந்தர்ப்பங்கள் இருந்தன.

தினமும் பின்னேரங்களில் நிலாக் காலங்களில் ஆண் பிள்ளைகள் பெண்பிள்ளைகள், வளர்ந்த ஆண்களும் மகிழ்சிசிகரமான கோஸ்டிகளாக சேர்ந்து விளையாடி மகிழ்வார்கள்.

ஆண்களுக்கான விளையாட்டுக்கள்.

கிட்டிப்புல் அடித்தல்

மட்டைப் பந்து அடித்தல்

கட்டைப் பந்து அடித்தல்.

வார் அடித்தல்

நொண்டி அடித்தல்

கிளித்தட்டு

கவடி அடித்தல்

சுலக்காய் அடித்தல்

கண்கட்டி விளையாட்டு
ஒளித்து பிடித்து
கட்டுக் காசி
குலுக்குக் காசி
போர் தேங்காய் உடைத்து விளையாடல்
பெண்களுக்கான விளையாட்டுக்கள்.
கண் பொத்தி விளையாட்டு
பூப் பறித்தல்
கல்யாணம் பேசல்
புள்ளிப் பீங்கான்
பூ மிதித்தல்
ஒளித்து விளையாடுதல்
கிள்ளி கிள்ளி பிராண்டி
சுரக்காய் பறித்தல்
தெறி காசி
கட்டுக் காசி (முஸ்தபா,2014).
தற்கால நிலை
மக்கள் இன்று முடங்கிக் கிடக்கும் தன்மையானது மனவருத்தத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

தற்காலத்தில் மேற்குறித்த விழையாட்டுக்களின் பெயர்களைக்கூட பல சிறுவர்கள் அறிந்திருக்கவில்லை. விளையாட்டு என்றால் என்னவென்பது குறித்து வித்தியாசமான கண்ணோட்டததைக் கொண்டுள்ளனர். விளையாடுவதற்கான நேரத்தையும் இவர்கள் பெறுவதில்லை. பகுதி நேர வகுப்புக்களின் அதிகரித்த நிலை தான் இதனை ஏற்படுத்தி விட்டிருப்பதாகக் கூறுகின்றனர். விளையாட்டு என்பது கையடக்கத் தொலை பேசிகளிலும், கணினிகளிலும், வீடியோ பிளேயர்களிலும் மாத்திரம் காணப்படுவதாக நம்புகின்றனர். விளையாட்டுக்களால் வியர்வை சிந்த முடியாது எனும் நிலைமை காணப்படுகின்றது. ஒரே இடத்தில் பல மணி நேரம் இருந்து கொண்டு ஓய்வு நேரத்தைக் களிக்க முடிகின்றது. இந் நிலையானது ஒரு ஆரோக்கியமற்ற தலை முறையினரினை எதிர் காலத்தில் உருவாக்கி விடுமோ எனும் அச்சம் நிலவுகின்றது.

ஆரம்ப காலங்களில் மாலை முழுவதும் விளையாடி குழந்தைகள் உளவியல், உடலியல் ஆரோக்கியம் கொண்டவர்களாக இருந்திருக்கின்றனர். எனினம் தற்போது Cartoon, candy cruss,bib boss,tom and cherry, vedio game, I phone என இருந்த இடத்திலேயே குழந்தைகள் அசைவின்றி இலத்திரனியல் ஊடகங்களில் பொழுதுகளைக் கழிக்கின்றனர். இது குழந்தைகளின் சமுகமயமாக்கல் செயல்களில் ஈடுபடுவதில் சவால்களை ஏற்படுத்திவிடுகின்றது. நண்பர்களுடன் விளையாடல், வெற்றி தோல்வியை ஏற்றுக் கொள்ளல், மட்டுமன்றி உற்சாகமாள விளையாட்டு மூலம் வியர்வை வெளியேறுவதனால் ஆரோக்கியமான வாழ்வைப் பெறல் என்பனவும் சவாலாகவே காணப்படுகின்றது. மிக அண்மைக் காலங்களில் BLUE WALE எனும் Cartoon சிறுவர்களை தற்கொலைக்குத் தூண்டும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இன்றுவரை பல சிறுவர்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன.

**திருமணம்**

ஆரம்பகாலத் திருமண முறைகள் மிகவும் கோலாகரமான முறையில் இடம் பெற்றுள்ளன. அவற்றைப் பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்.

மாப்பிள்ளை தேடுதல்.
மாப்பிள்ளை கேட்டுப்போதல்.
சீதனமும் சீர்வரிசையும்
பெண்சாரார் மாப்பிள்ளை வீடேரல்
மாப்பிள்ளையின் அன்பளிப்பு

கலியாண வேலைகள்
வீடு, வளவு வேலிகளின் புதுப் பொலிவு
பந்தல் அமைத்தல்
மணவறைச் சோடினை
திருமண அழைப்பு
கலியாண விருந்து
கலியாணச் சிறப்புக்கள்
பெண் மாப்பிள்ளை வீட்டாரை அழைத்தல்
மாப்பிள்ளை பெண்ணுக்கு தண்ணீர் வார்த்தல்
மாப்பிள்ளை பெண்ணை அலங்கரித்தல்
காவின் (மணஒப்பந்தம்) எழுதுதல்
பெண் மாப்பிள்ளைக்கான அன்பளிப்புக்கள்
மாப்பிள்ளை ஊர்வலமும் மங்கலப்பாடலும் (சலீம், 1992).

**திருமணத்தின் தற்கால நிலை.**

திருமண நிகழ்வானது பண்டைய காலம்போன்று சடங்குகளால் சோடனை செய்யப்பட்ட நிகழ்வாக நடைபெறாது. இருப்பினும் ஒரு மனிதனின் வாழ்வில் மிகவும் பிரதான இடத்தைப் பெறும் நிகழ்வாகவே இன்னும் காணப்படுகின்றது. எனது ஆய்வுப் பிரதேசத்தில் வாழும் மக்கள் இஸ்லாமிய மார்க்கத்தினைப் பின்பற்றும் முஸ்லிம்களாவர். இஸ்லாத்தின் பார்வையில் திருமணம் மிகவும் எளிமையாக நடக்க வேண்டிய நிகழ்வாகக் காணப்படுகின்றது. எனினும் எமது பிரதேச மக்களின் திருமண நிகழ்வுகள் மிகவும் அதிகரித்த செலவில் நடைபெறுவதனைக் காணலாம்.

சம்மாந்துறைப் பிரதேச மக்களினால் பின்பற்றப்படும் திருமண நிகழ்வுகளில் இஸ்லாமிய சட்டங்கள் எதுவும் மீறப்படுவதில்லை. எனினும் அதற்கும் மேலதிகமாக பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறுவதனைக் காணலாம். தற்போது பெரும்பாலும் மணமகன் வீடுகளுக்கு பெண் வீட்டார் மாப்பிள்ளை கேட்கச் செல்லும் போது மணமகன் வீட்டாருக்கு மிகவும் வேண்டப்பட்ட மனிதர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர். அவர்கள் முதலில் கேட்டு மணமகளின் பொற்றோர் சற்று சாதகமான முடிவினைக் கொடுக்கும் போது மாத்திரம் மணமகளின் பெற்றோர், மூத்த சகோதரர்கள் சிலவகைப் பழங்கள் உட்பட இன்னும் சில பொருட்களை எடுத்துக் கொண்டு உத்தியோகபூர்வ விஜயம் செய்கின்றனர். அங்கர் 1முபபக்கட், சீனி, பிஸ்கட் டின், அப்பிள், ஒரேஞ், அன்னாசி, மாதுளை, கிறேப்ஸ் எனபன அதில் பிரதானமானவையாகும்.

மாப்பிள்ளை விட்டார் நல்ல முடிவினை சொல்லி விட்டால் அவ்வீடு அன்றிலிருந்தே கல்யாணக் கலை கட்டிவிடுகிறது. அதன் பினர் மாப்பிள்ளையின் சகோதரிகள், உறவினர்கள் பெண் வீட்டுக்கு வந்தால் செங்கம்பள வரவேற்பு இடம்பெறும். மாப்பிள்ளை விட்டில் ஓர் துயரம் அல்லது மகிழ்ச்சி இடம்பெற்றால் அதற்கும் பெண் வீட்டார் அதீத முக்கியத்துவம் கொடுத்து செயற்படுவார்கள்.

திருமணப் பேச்சு வார்த்தைகள் நிகழ்ந்ததனை அடுத்து திட்டக்கட்டுதல் நடைபெறுகின்றது. தற்போது பெண்ணுக்கு மிகவும் வேண்டப்பட்ட 10க்கும் உட்பட்டவர்கள் மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று திருமண நாள்,திகதி என்பவற்றை நிச்சியம் செய்யும் தினமே இதுவாகும். இதற்கும் வட்டா எனும் பெயரில் ஓர் உணவுப் பொதி தயாராகும். இதற்கென அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்படட வட்டாப் பாத்திரம் ஊரிலுள்ள பழைய பணக்காரர்களின் வீடுகளுக்குச் சென்று எடுத்துவரப்பட்ட செங்கல் தூள், இலுமிச்சை சாறும் கலந்து பூசி மினுக்கி இள வெயிலில் காயவைத்து பின்னர் வெள்ளைச் சீலை, அலங்கார நெட் சீலை, சட்டை ஊசி என்பன தயார் நிலையில் வைக்கப்படும். இதனுடன் சேர்த்து ஓர் பெரிய பாத்திரம் வைக்கப்படும்.

பெரும்பாலும் ம.்ரிப் தொழுகையினை தொடர்ந்து பெண் வீட்டில் உறவினர்கள் கூடி வருவார்கள். முன் மண்டபத்தில் பிரதானமாக ஆண்கள் ஒன்று சேர்ந்து எடுத்து வைக்கப்பட்ட பெரிய பாத்திரத்தில் வட்டாவை வைப்பர். இதன்போது அனேமானோரில் வாய்கள் 'பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹிம்' எனுதம் வாசகத்தை முனுமுனுத்துக் கொள்ளும் பின்னர் வட்டாவில் பாக்கு, வெற்றிலை, ஏலம், கறுவா, பிளம்ஸ், கராம்பு, சீனி, அப்பிள், ஒரேஞ், அன்னாசி, கிறேப்ஸ், பிஸ்கட் டின் என அனேக பொருட்கள் வைக்கப்பட்டு வெள்ளைத் துணியால் மூடி கட்டப்பட்டு மேலே அலங்கார நெற் துணியால் மூடப்படும். பெண்ணின் மாமா இதனைச் சுமந்து வாகனத்தில் ஏற்றி மாப்பிள்ளை விட்டில் தன் கரத்தால் இறக்கி வைப்பார். இம்மரபானது எந்தவித மாறுதலுமின்றி பின்பற்றப்படுகின்றது. இதன்போது உறவினர்களின் மகிழ்ச்சிக்கு அளவேதும் இருப்பதில்லை. சென்ற ஆண்கள் திரும்பும்வரை பெண்கள் காத்துக் கொண்டிருப்பர். சற்று வயது முதிர்ந்த பெண்கள் இறை பிரார்த்தனையில் இருப்பதனையும் காணலாம்.

பெண்ணில் ஆடையானது மிகவும் வேகமாக காலத்துடன் சேர்ந்து தானும் நவ நாகரீக போர்வையில் வாழ்ந்து வருகின்றது. ஆரம்பகாலத்தில் பாரம்பரியமான முறையில் பெண் அலங்காரம் நடைபெற்றாலும் தற்போது அவ்வாறு நடைபெறுவது கிடையாது. சற்று முன்னைய காலத்தில் மணப்பெண்ணுக்கு சேலை அணிவிக்கும் வழக்கம் காணப்பட்டது. எனினும் அவை மாறி லெஹங்கா எனும் ஆடை அணியும் மரபாக மாறியது. இது மிகவும் விலை உயர்ந்த ஆடையாகும். இதனை அணிவது மிகவும் கௌரவமான ஒன்றாகவும் இம்மக்களால் கருதப்படுகின்றது. எனினும் தற்போது வெள்ளை நிற பெரிய அலங்காரம் நிறைந்த 'மெக்சி' போன்ற ஆடை அணிவது பெஷன் என கருதப்பட்டு அணியப்படுகிறது. மேற்குறித்த ஆடைகளை விலைக்கு வாங்கமுடியாதவர்கள் வாடகைக்கு எடுத்து அணிந்து அந்நாளை சிறப்பிக்கும் வழக்கமும் இருந்து வருகின்றது. மணப் பெண் அலங்காரத்திற்காகவும் அதிகமாகப் பணம் செலவிடும் வழக்கம் காணப்படுகின்றது.

மாப்பிள்ளைக்கு குடை பிடித்தல், கால்களுக்க வாசனைத்திரவியம் தெளித்தல், வெள்ளைச் சீலை விரித்தல், மாப்பிள்ளை சிவப்புத் தொப்பி அணிதல் முதலிய மரபுகள் மருவி வருகின்றன. மாப்பிள்ளை தாலியினை கழுத்தில் போட்டுவிடும் மரபும் குறைந்து வருகின்றது. தாலி நகைப்பெட்டியினை மணப்பெண் கைகளில் வழங்குகின்றமையினை அதிகம் காணப்படக் கூடியதாய் இருக்கிறது. இஸ்லாமிய இயக்கங்களின் புத்தாக்கமான கருத்துக்களின் தாக்கத்தினால் இவை நிகழ்ந்திருக்கலாம் என விமர்சகர்கள் கூறுகின்றனர். பெண்ணிற்கு மாமியார், மதினிமார் மோதிரம், காப்பு, சபோனா, பூட்டுக்காப்பு, நெக்லஸ் முதலியவற்றையும் அணிவிக்கின்றனர். இதற்கு 'அடையாளம் போடுதல்-' 'பெட்டி கொண்டுபோதல் எனும் பெயர்களில் திருமணத்திற்கு முன்பு நிகழ்வுகள் நடாத்தப்படுகின்றன.

திருமணம் நடந்ததிலிருந்து 3ம் நாள் அன்று 'தண்ணியில் வெந்தது' எனும் பெயர் கொண்டு மணப்பெண்ணின் தாயார் இடியப்பம்,பிட்டு,லவரி முதலிய நீராவியில் அவித்து எடுக்கப்பட்ட ஆகாரங்களை மாப்பிள்ளையின் தாய் வீட்டுக்க கொண்டு செல்வர். மேலும் 'மறவுணச் சாப்பாடு' எனும் ஓர் பகல் விருந்தும் பெண் வீட்டாரால் விஷேடமான முறையில் செய்யப்படுகின்றது. தண்ணியில் வெந்தது என்னும் உணவானது பெரும்பாலும் இராக்காலங்களில் கொடுக்கப்படுகின்றது. மணம் முடித்த தம்பதியினர் உடல் ரீதியாக ஒன்றியைத்தும் 'வலீமா' எனப்படும் நிகழ்வு அதாவது பகற்போசண விருந்து நடைபெறுகின்றது. பெரும்பாலும் திருமணம் குறித்த அனைத்து நிகழ்வுகளும் இதனுடன்நிறைவடைகின்றது.

இவ்வாறு வெகு விமர்சனமான முறையில் நடாத்தப்படும் திருமணமானது பெரும் தன்மையான விடயமாக நோக்கப்படுகின்றது. இஸ்லாத்தின் பார்வையில் செலவு குறைந்த அளவில் நடாத்தப்படும் திருமணங்கள் போற்றப்படுகின்றன. 'மஹர்' என அழைக்கப்படும் மணக்கொடையானது பணமாக,நகையாக அல்லது வேறு எதுவாகவும் இருக்க முடியும். எனினும் தற்போது அதிகரித்த தங்க நகைகளை மஹராக கொடுப்பதனை காணலாம். மாப்பிள்ளை திருமண ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டதும் மணமகளின் தந்தை ஓர் தங்க நகையினை மாப்பிள்ளையின் கைகளில் பரிசாக அணிவிப்பர்.

பெண் பிள்ளைகளுக்கு வீடு கட்டி காணி, வழவு, மாப்பிள்ளைக்கு சீதனம் கொடுத்து, மாப்பிள்ளையின் சகோதரிகளுக்கு தங்க நகை ஆபரணம் கொடுத்து திருமணம் செய்ய வேண்டும் எனபதற்காக ஆடவர்கள், மூத்த சகோதரர்கள், பெண்ணைப் பெற்ற தகப்பன் வெளிநாடுகளுக்கு சென்று சொந்த பந்தங்களை விட்டு விலகி உழைக்க வேண்டும் எனும் நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்படுகின்றனர். இதனால் அவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாவது மட்டுமன்றி அவர்களின் திருமண வயதும் தள்ளிப் போய் விடுகின்றது.இது ஒரு பாரிய சமூகப் பிரச்சினையினை ஏற்படுத்தி விடுகின்றது.

இஸ்லாத்தின் பார்வையில் திருமணம் என்பது வயது வந்த ஆண்,பெண் திருமணம் முடிப்பதற்குரிய தகுதியினைப் பெற்றிருக்கும்போது பிற்படுத்தாது செய்து வைத்திருக்க வேண்டிய கடமையாகக் காணப்படுகின்றது. ஆடம்பரமான நிகழ்வுகளாலும் அத்தியவசியமற்ற செலவுகளாலும் திருமணம் தள்ளிப் போதல் என்பது இறுதியில் மன உளைச்சலை ஏற்படுத்தி மன அழுத்தத்தை சாதகமாக்கி விடக்கூடிய அபாய நிலை காணப்படுகின்றது.

திருமணம் என்பதும் வெறும் சடங்காகவன்றி ஆரம்பகாலத்தில் குடும்ப உறுப்பினர்கள், உறவுகள், அண்டை வீட்டார்கள் கூடிக்கழித்து உண்டு உறவாடி மகிழும் ஓர் சுவாரஸ்யமான நிகழ்வாகும். அவை இன்று ஏஜண்ட்களின் கையில் ஓர் விளையாட்டு பொம்மையாக மாறி வருகின்றது. கையில் செப்பு பொருட்களுடன் உறவினரைப் பூரிப்புடன் வீடு தேடிச் சென்று அழைத்த மரபுகள் இன்று வெற்று அட்டைகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் மையின் எழுத்துக்களில் உறைந்துவிட்டதா என எண்ணத்தோன்றுகிறது.

**பள்ளுப் பாடுதல்.**

1950ம் ஆண்டுக்கு முன்பு பள்ளுப் பாடுதல் என்ற நிகழ்ச்சி எமதூரில் நடைபெற்றது. இதில் பாடுபவர்களுடன் இயற்றி சந்தர்ப்பத்திறகேற்ப பாடல் மூலம் பதில் கூறுவார்கள். இப்பாடல்கள் ஆளை ஆளை இழிவாகவும் மனைவி உம்மா போன்றோரை இழிவுபடுத்திப் பாடுவார்கள்.

பொதுவாக இந்த நிகழ்ச்சி ஊருக்குள் இல்லாமல் தூரத்தில் வயல் வெளிகளிலே இரவு நேரத்தில் நடைபெறும். பெண்கள் வரமாட்டார்கள். சேவகப்பற்று, சேனைவட்டை என்பற்றில் மேடை அமைத்து இரண்டு ஊர்களைச் சேர்ந்தவர்கள் சம்மாந்துறை, கல்முனை, அக்கரைப்பற்று என்று போட்டி நடைபெறும்.

ஊரின் தலைவர்கள் தலைமை தாங்குவார்கள். ஊரின் சண்டியர்களும் அமைதியை நிலைநாட்ட தயாராக நிற்பார்கள். குழப்படிகள் பிரச்சினை ஏற்படாமல் அடக்கிவிடுவார்கள்.

அருதரப்பின் பாடல்களிலும் பச்சை உருவானியம் என்னும் அப்பட்டமான இழிவு சொற்கள் பறந்து வரும். ஆக்காலத்தில் இது அரிப்பான் வெள்ளைத்தம்பி என்பவவர்கள் புகள் பெற்று இருந்தார்கள். 1950ம் ஆண்டிற்கு பிறபாடு இக்கலாச்சாரம் மறைந்து விட்டது( Musthafa,2014).

பள்ளுப் பாடுதல் மரபானது தற்கால சமூகத்தவரால் தெரியாத ஒரு நிகழ்வாக மாறி வந்திருப்பதனைக் காணலாம். பள்ளுப் பாடுதல் மரபு தற்போது பெரும்பாலும் முற்ற முழுதாகவே மறைந்துவிட்டது. எனினும் சில வயதான பெண்கள் கவிபாடும் திறன் கொண்டவர்களாக காணப்படுகின்றனர். அவை வசை, வாழ்த்து இரங்கல் எனும் தன்மை கொண்டுள்ளன. எனினும் இளந் தலைமுறையினரால் இது ஏளனம் செய்யப்படுவதாக அறிய முடிகின்றது.

**பட்டப் பெயர் பண்பாடு**

1950ம் ஆண்டுக்கு முன்பு இங்குள்ளவர்களை இலகுவாக தெரிந்து கொள்வதற்கும், அடையாளப்படுத்திக் கொள்வதற்கும் உரிய நபரின் சொந்தப் பெயரில் அழைக்காமல் பட்டப்பெயர் எனும் புனைப் பெயரில் அழைத்தார்கள்.

மீசைக்கார ஆலிமு.

கஞ்சாட ஆலிமு

கண்ணாடி ஆலிமு.
புத்தளத்து ஆலிமு.
ஹாஜியார் ஆலிமு.
கறுத்த ஆலிமு.
சின்ன ஆலிமு.
கலட்டியர் ஆலிமு.
நத்தார் ஆலிமு.
களனியர் ஆலிமு.
எம்.ஆர். ஆலிமு
தேன் மௌலவி
டிஸ்கோ மௌலவி
வளிறு பிரட்டியர் ஆலிமு(Musthafa,2014)

**தாய் வழிக் குடிமரபு முறை**

சம்மாந்துறை பிரதேச மக்களிடத்தில் தாய்வழி குடிமரபு முறைமை பின்பற்றப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு குடிக்கும் ஒரு தலைவரை நியமிக்கும் வழக்கமும் பண்டைய காலத்திலிருந்து இருந்து வருகின்றது. இது இன்றைய காலங்களில் கூட பின்பற்றப்படுகின்றது. திருமணப் பேச்சு வார்த்தையின் போதும் திருமணத்திற்கான ஒப்பந்தம் நிறைவேற்றுவதற்கு தேவைப்படும் பற்றுச் சீட்டுகளுடன் குடி மரைக்காரின் பற்றுச் சீட்டும் இணைக்கப்படும் மரபு இருந்து வருகின்றது. இது அடிப்படையற்ற முறையில் நவீனத்துவப் போர்வையில் சிக்கிக் கிடக்கின்ற இளைஞர்களால் சிலபோது எதிர்க்கப்படுகின்ற போதும் அனேகமானோரால் பின்பற்றப்பட்டு வருகின்றது. ஒரே குடிக்குள் திருமண உறவுகள் நிகழ்வதைத் தடுத்து ஆரோக்கியமான குழந்தைகளை சமூகத்துக்கு உருவாக்கிக் கொடுப்பதே இதன் உள்ளார்ந்த் நோக்கமாகும்.

பட்டப் பெயர்களும், தாழ்வடிக் குடிமரபு முறையும் இன்றும் புழக்கத்தில் காணப்படுகின்றது. எனினும் அவற்றுக்கு சில புதிய இஸ்லாமிய எழுச்சி இயக்கங்களால் எதிர்ப்பலைகள் தோன்றியுள்ளன. அத்துடன் பெண்கள் பக்குவமடைதல் எனும் நிகழ்வானது தற்போது பெரும்பாலும் விழாவாக் கொண்டாடப்படுவதில்லை. எனினும் சிலர் அதனை பாரம்பரிய நிகழ்வாக ஏற்று நடைமுறைப்படுத்துகின்றனர். இங்கு மதினிமார் மாமிமார்க்கு பிரதான இடம் வழங்கப்படுகின்றது. இதுவும் அருகி வருவதாகவே எண்ணத் தோன்றுகிறது(முகைடீன், 1996).

**பெண்கள் பக்குவமடைதல்**

சுமார் 20, 25 வருடங்களுக்கு முன்னர் மகள் ஒருத்தி பருவமடைந்துவிட்டால் அதனைப் பகிரங்கப்படுத்தி அலங்காரம் செய்து இனசனத்தவர் கொண்டாடுவதற்கு வாய்ப்பு வைப்பது வழக்கமாக இருந்தது. மஞ்சள் பூசி விளையாடுதல், நீர் இறைத்து விளையாடுதல் ஆகிய கேலி விளையாட்டுக்கள் நடைபெறும். இவ்வழக்கம் தற்போது முஸ்லிம் சமூகத்திடம் முற்றாகவே ஒழிந்துவிட்டது. இது வரவேற்கத்தக்க ஒரு மாற்றம். பயனற்ற முறையில் பணத்தை விரயம் செய்தலும், வீண்நேரக்கழிவும் ஏற்படாது. இவ்வகையில் நம்மிடையே ஏற்பட்டிருக்கும் கொள்கை மாற்றங்களும் இஸ்லாமியப் பண்பாட்டுக்கு இணந்து நெருங்கி வரும் செய்கைகளாகும் (Shamsudeen Moulana.1997).

**பொருளாதாரம் சார் பண்பாட்டு அம்சங்கள்.**

**விவசாயம்**


உலகின் பல நாடுகளிலும் நாட்பட்ட சிறுநீரக நோயின் (Chronic Kidney Disease) தாக்கமானமு அதிகரித்து வருவதனை அவதானிக்க முடிகிறது. அத்துடன் இந்நோய் பொது மக்களின் ஆரோக்கிமான வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இலங்கையிலும் இன்று வரை இந்நோயிற்கான காரணிகள் தெளிவாகக் கண்டறியப்படவில்லை. இலங்கையில் ஒவ்வொரு வருடமும் 20,000 நோயாளிகள் நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பினால் பாதிக்கப்படுகின்றனர். இவர்களில் 50 சதவீதமானோர் வட மத்திய மாகாணத்தைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். 1990களின் ஆரம்பத்தில் இலங்கையில் வட மத்திய மாகாணங்களில்

குறிப்பாக அநுராதபுரம் மாவட்டத்தில் இந் நோயின் அதிகரித்த நிலையை அவதானிக்க முடிந்தது. 1990 இல் ஆயிரக்கணக்கான மக்கள் நாட்பட்ட சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டனர். இத்கு நீரிழிவு, உயர் குருதியமுக்கம் என்பன காரணிகளாக அமையவில்லை என வைத்திய ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. அத்துடன் ஆண்டுதோறும் இந்நோயாளிகளின் வீதம் அதிகரித்து வருகின்றமையினைக் காண முடிகிறது.

இலங்கையில் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகளைப் போன்றே இப்பிராந்திய விவசாயிகளும் அதிக விளைச்சல் மற்றும் நோய் எதிர்ப்பு போன்ற நோக்கங்களுக்காக அதிகளவு இரசாயனங்களை விவசாயத்தில் பிரயோகிக்கின்றனர். இவை விளைச்சல் மற்றும் ஏனைய நலன்களைத் தருகின்ற போதும் விவசாயிகளுக்கு பல்வேறுபட்ட நோய்களையும் உடலியல் உபாதைகளையும் ஏற்படுத்துகின்றன. உதாரணமாக கிருமிநாசினிகளை விசுறுகின்ற போது தோல் இலகுவில் பாதிப்படையக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது. அதேபோன்று விவசாயிகள் இரசாயனங்களைக் கலக்குகின்ற போது, இயந்திரத்தில் அதனை ஊற்றுகின்ற போது, பயிர்களுக்கு விசிறுதல் மற்றும் மருந்து தெளிக்கும் இயந்திரங்கள் மற்றும் துப்பரவு செய்யும் வேளைகளில் முறையான பாதிப்பு உடைகளை அணியாதிருப்பின் அது அவர்களது உடல் உறுப்புகளை தாக்குவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றது. குறிப்பாக தோல், நாசி போன்ற உறுப்புக்களின் ஊடாக இரசாயனங்கள் மனித உடலைச் சென்றடைந்து காலப்போக்கில் உள்ளுறுப்புக்களையும் பாதிப்படையச் செய்கின்றன.

2005 ஆம் ஆண்டு உணவு மற்றும் விவசாய அரமைப்பு மேற்கொண்ட ஆய்வு ஒன்றில் இலங்கையில் தனியார் துறை நிறுவனங்களினால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தடைசெய்யப்பட்ட களைக்கொல்லி வர்த்தக நாமங்கள் பதிவு செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டு விவசாயிகளினால் பயன்படுத்துவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. பல்வேறுபட்ட ஆய்வுகள் விவசாய இரசாயனங்கள் மனி ஆரோக்கியத்திற்கு அச்சுறுத்தலானது என கண்டறியப்பட்டுள்ளது. வவுனியா பிரதேசத்திலுள்ள பெருந்தொகையான விவசாயிகள் இரசாயனங்களை விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துகின்றனர். பொதுவாக ஒரு பயிர் போகத்திற்கு இரு தடவைகள் இரசாயன பசளைகள் மற்றும் கிருமிநாசினிகளைப் பயன்படுத்துகின்றனர். சிலவேளைகளில் மூன்று தடவைகள் அல்லது அதற்கு மேலும் பயன்படுத்துகின்றனர். Urea, Triple Super Phosphate, Muriate Of Potash, Ammonium Sulphate போன்ற வளமாக்கிகளும் பயிர்களைத் தாக்குகின்ற நோய்களைப் பொறுத்து பல்வேறு வகையான கிருமிநாசினிகளும் (Paraquat, Nominee, Monouron, Roundup) பிரயோகிக்கப்படுகின்றன(கிரிசாந்தன், 2017).

ஆய்வுப் பிரதேச மக்களும் இந் நோய்களுக்கு விதி விலக்கல்ல எனடபதனைப் பின் வரும் தரவுத் தளம் காட்டுகின்றது.




இவை தவிர வியாபாரம், கைத் தொழில், பண்ணை வளர்ப்பு என்பனவும் காணப்படுகின்றன.

**வியாபாரம்**

இப்பிரதேச முஸ்லிம்களில் கணிசமான தொகையினர் வியாபாரத்தில் ஈடுபட்டனர். சில இடங்களில் பொதுச் சந்தைகளும் தோன்றின. ஞாயிற்றுக்கிழமை தோறும் கிழமைச் சந்தையும் உண்டானது. இச்சந்தையில் மொத்த வியபாரம், சில்லறை வியாபரம், பொட்டணி வியாபாரம், தேனீர்க் கடை ஆகிய எல்லாத்துறைகளிலும் முஸ்லிம்களே கூடிய ஆதிக்கம் செலுத்தினர் (Shamsudeen Moulana.1997).

தற்போது பல்வேறு பல சரக்குக் கடைகள் புதுப் பொலிவுடன் காட்சியளிக்கின்றன. பாரம்பரிய சந்தை அமைப்புக்கள், பண்டமாற்று நடைமுறைகள் காணப்படுவதில்லை. இவை தற்கால சமூகத்தவரினாலும் விரும்பி ஏற்கப்படுவது வரவேற்கத்தக்க விடயமாகும்.

**கைத்தொழில்.**

பன்பாயிழைத்தல், சீனி மிட்டாய் வியபாரம், கைப்பணிப் பொருள் விற்பனை, சிறு குடிசையில் அப்பம் சுட்டு விற்றல் போன்றன காணப்பட்டிருக்கின்றன. எனினும் அவற்றின் நிலைப்பு பெருமளவில் நிலைக்கவில்லை என்று தோண்றுமளவிற்கு அருகி வருகின்றது.

**பண்ணை வளர்ப்பு**

ஆடு, மாடு, கோழி வளர்ப்பிலும் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. இவை முழுநேரத் தொழிலாக மாறி சிறந்த தடையங்களை உண்டாக்கியது. பாலும் தயிரும் பணத்திற்கு விற்கும் நிலை ஏற்பட்டது. நாட்டுக் கோழி முட்டையும் பிராந்தியத்தின் தேவையை பூர்த்தி செய்தன. கோழி முட்டைத் தேவை அதிகரித்ததும் உயர்தரத்தில் கோழிகள் பெருந் தொகையாக பண்ணை முறையில் வளர்க்கப்பட்டன(Shamsudeen Moulana.1997).

எனினும் தற்போது வளர்ப்பக் கோழி வியாபாரம் அதிகரித்துக் காணப்படுகின்றது. என்றாலும் அவை சமூகத்தில் அதிகரித்த நன் மதிப்பைப் பெறத் தவறியுள்ளது என எண்ணத் தோன்றுகின்றது.

**சமயம்சார் பண்பாட்டு அம்சங்கள்.**

**மௌலூது ஓதுதல்**

சுப்ஹான மௌலூது, முகைதீன் மௌலுத், மீராஸாஹிப் ஆண்டவர் மௌலூத் போன்றவற்றை குறிப்பிட்ட காலங்களில் தனவந்தர்கள் செய்து வந்தார்கள். சிறிய கந்தூரி என்றும் இதனை அழைப்பர். மௌலூதுகளை மனனம் செய்த அனைவரும் பல ராகங்களில் ரசித்துப் பாடுவார்கள். இடையிடையே அரபு பைத்களோடு இணைந்து போகக் கூடிய தமிழ் இன்னிசைக் கீதங்களும் இசைக்கப்படும். குராமங்கள் தோறும் அக்கீதத்தைப் பாடுபவர்கள் பெயர் பெற்றிருந்தார்கள். இரவு வேளைகளில் 3,4 மணித்தியாலங்களுக்கு பக்தியுடன் இப்பாராயணம் நடைபெறும். பின்னர் மௌலூது விழாக்களின் உண்மை நிலையை மக்கள் உணரத் தொடங்கினர். கடன் பட்டேனும் கட்டாயம் செய்யவேண்டியது அவசியமா ஏன்பது கேள்விக்குரிய கருத்தாயிற்று. எனவே மௌலூது விழாக்களை வெகுவாகக் குறைக்கத் தொடங்கினர். இப்போதெல்லாம் மிகக் குறைந்தளவிலேயே நடைபெறுகின்றன(Shamsudeen Moulana.1997).

**தலைப் பாத்திஹா**

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ஸாஹிப் என்ற பெயரால் இது ஆக்கப்பட்டது. முஸ்லிம் மக்கள் அக்காலத்தில் பிள்ளைப்பேற்று வருத்தத்தின்போது பிறசமய சடங்குகளையும் ஆசாரங்களையும் பின்பற்றி வந்தனர். ஆகவே அக்காலகட்டத்தில் தலைப்பாத்திஹா அங்கீகரிக்கப்பட்டதாக இருக்கலாம். அப்போது மகப்பேறு காலம் நெருங்கியதும் வீட்டைப் பெரிதும் அழகுபடுத்தி வெள்ளைக் கட்டி, பழங்கள், வெற்றிலைகளை தொங்கவிட்டு அலங்கரிப்பர். அதன் கீழ் தலைப்பாத்திஹா பெரும் ஆரவாரத்துடன் நடைபெறும். அதைக் செய்யாவிட்டால் அப்போதிருந்தவர்களுக்கு மனத் திருப்தியோ நிம்மதியோ இல்லை.

தலைப்பாத்திஹா வரவர மறைந்துவிட்டது. ஆடம்பரமாக தலைப்பாத்திஹா ஓதுதல் அகீகா எனும் அவசியமான சடங்கையே மறைத்துவிட்டது. ஆனாலும், அன்று அகீகா கொடுக்கும் பழக்கம் அதிகரித்துக்கொண்டு வருகின்றது(Shamsudeen Moulana.1997)

**கத்தங்கள்**

இருட்டோடைக் கத்தம், 3ம் கத்தம், 7ம் கத்தம், 20ம் நாள் பெரிய மாவு ரொட்டி, 40ம் நாள் சாப்பாடும் ரொட்டியும், வருடக்கத்தம், கப்று மூடிக் கத்தம் ஓதுதல் போன்றன அன்றிருந்த சில பழக்கங்கள். இவற்றில் பல இன்று இல்லாதொழிந்துவிட்டது. அவை அந்திய மரபை ஒட்டியதாகும்.

அவுலியாக் கத்தம், முகைதீன் ஆண்டவர் கத்தம், அலியார் கத்தம் என்றெல்லாம் என்றெல்லாம் பல கத்தங்கள் ஓதும் முறைகள் அன்றிருந்தன. வேள்ளிக் கிழமை தோறும் யாஸீன் ஓதுதல் ஒரு வழக்கமாக இருந்தது. அவ்வாறான வழக்கங்கள் அன்றைய மக்களின் கல்வியளவுக்கும் அன்றைய சூழ்நிலைகளுக்கும் ஏதோ ஒரு வகையில் அறிமுகம் செய்யப்பட்டன.

இன்று பொருளாதார வசதியுடையவர்கள் தம் இனத்தவர் மீது அன்னதானம் கொடுப்பதும் கத்தம் ஓதுவதும் அறிவு ரீதியான வகையில் நியாயப்படுத்தக்கூடியவகையில் அமைந்துள்ளன(Shamsudeen Moulana.1997).

**இப்தார்**

நோன்பு காலங்களில் அதிக நன்மை வேண்டி 3 ஈச்சம் பழத்துடனான பல உணவுப் பொருட்கள் வைக்கப்பட்டு நோன்பு திறக்கப்படும். மிகவும் அதிகமான நன்மையினை தேடித் தரும் ஒரு நிகழ்வாக மக்கள் இதனை கண்ணியப்படுத்தி மேற் கொள்கின்றனர். இது முன்னைய காலங்களை விட தற்போது அதிகரித்து வருகின்றது.

மேற்குறித்த மௌலூத், தலைப்பாத்திஹா, கத்தம் என்பன தற்காலத்தில் மிகவும் அருகி வருவதாகவே தெரிகின்றது. தௌஹீத் ஜமாஅத்தினரின் காரசாரமான சன் மார்க்க உபன்னியாசங்களே இந்நிலைக்குக் காரணம் என பெருவாரியான மக்கள் கூறுகின்றனர்.

மேற்குறித்த பாரம்பரிய பண்பாடுகள் பல்வேறு பணிகளினால் அருகிக் கொண்டு செல்கின்றது. அதனால் சமூகம் பல்வேறு வகையான சவால்களை எதிர் நோக்குகின்றது.

மௌலூது ஓதுதல், தலைப் பாத்திஹா ஓதுதல் மரபுகள் தௌஹீத் ஜமாஅத்தினரின் புரட்சிகரமான பயான் நிகழ்ச்சிகளால் தடீர் மறைவை சந்தித்திருக்கின்றன. கத்தம் என்று மரணித்து 3,7,9,12ம் நாட்களில் கொடுக்கப்படும் உணவு உபசாரங்களுக்கும் முற்றுப் புள்ளி வைத்துவிட்டதாக ஊர்க்கதைகள் உலாவருகின்றன. எனினும் இஸ்லாத்தில் அங்கீகரிக்கப்பட்ட இப்தார் நிகழ்வு தற்போது முந்தய காலங்களை விடவும் அதிகமாகவும் நவீன முறையிலும் இடம் பெறுகின்றது. அஜ்வா இன ஈச்சம் பழங்களும், அப்பிள்களும், திராட்சைகளும், பானங்களாக பலூடாக்களும் மகிழ்வூட்டுகின்றன. இந்நிகழ்வுகள் இடியப்பங்களில் அனிதே முடிவடைகின்றன. இது ஓர் வரவேற்கத்தக்க நிகழ்வாக சமூகத்தாலும், சமயத்தாலும் வரவேற்கப்படுகின்றது.

இவ்வாறு பல்வேறு விமர்சனங்களும் காணப்படவே செய்கின்றன. எனவே சம்மாந்துறைப் பிரதேசத்தில் ஆரம்ப காலங்களில் நிலவிய பண்பாட்டு கலாசார அம்சங்களும் அவற்றின் தற்கால நிலையும் கிடைக்கப் பெற்ற தரவுகளின் அடிப்படையில் மேற்குறித்தவை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

**5) முடிவுரையும் பரிந்துரையும்**

**முடிவுரை:**

பண்பாடானது பொதுவாக குறியீடுகள், மொழிகள், விழுமியங்கள், நியமங்கள், பொருள்கள்,பண்பாடு முதலிய கூறுகளை கொண்டு காணப்படுகிறது. இத்தகைய பண்பாடு மூலமாகவே ஒரு சமூகம் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறது. இத்தகைய பண்பாட்டு,கலாசார,விழுமியங்கள் பல்வேறு காரணங்களால் மாற்றமடைகின்ற போது அவை அச் சமூகத்தின் யதார்த்தமான தன்மையிலும் மாறுதல்களை ஏற்படுத்தி விடுகின்றது. இத்தகைய மாற்றம் சில சந்தர்ப்பங்களில் வரவேற்கத்தக்கதாகவும் இன்னும் சில சமயங்களில் இரங்கத்தக்கதாகவும் அமைந்து விடுகின்றது. இத்தகைய திடீர் மாற்றத்தை மக்களினால் சாதாரணமாக ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. இத்தகைய சமூக அமைவு பல்வேறு பிரச்சினைகளையும் தோற்றுவிக்கும் வல்லமை வாய்ந்ததாகும்.

சமூகத்தினுடைய சீரான இயங்குயையானது அதனுடைய பண்பாடுகளால் நிறைவு காண்கிறது. சிறப்பான பண்பாடுகள்,விழுமியங்கள் பேணப்படும் போது அச்சமூகம் சிறப்புக் காண்பது இயல்பானதே. எனவே ஆய்வின் மூலமாக சில பண்பாட்டு அம்சங்கள் மாற்றமுறுகின்ற போது மொத்த சமூதாயமும் சில சவால்களை எதிர்கொள்வதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.அவற்றை பின்வருமாறு காட்டலாம்.

சமூகம் சார் பண்பாட்டு அம்சங்களிலேயே பத்து வகையான பண்பாட்டு அம்சங்கள் ஆய்வின் மூலம் அவதானித்துக் கொள்ளப்பட்டன.அவற்றில் பாரம்பரியமான உணவு முறைகள் மாற்றம் பெற்று துரித உணவு கலாசாரம் தோன்றியமையினால் பல்வேறு நோய்களுக்கு மக்கள் இலக்காகியுள்ளனர்.ஒரு குறித்த ஆரோக்கியமான வாழ்விலிருந்து உணவுக் கலாசாரமானது மாறியமையானது சமூகத்தின் ஆரோக்கியத்தினை நாளுக்கு நாள் வீழ்ச்சியடையச் செய்து வருகின்றது.

பண்டைய வைத்திய முறைகள் தற்காலத்தின் அருகி வருகின்றன. தற்போது ஆங்கில மருத்துவத்தின் எழுச்சியானது மிகவும் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. பக்கவிளைவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. மழைக்கு முளைக்கும் காளான் கூட்டம் போல் பாமசி, டிஸ்பன்சி என்பன உருப்பெற்றுவிட்டன. இயற்கையின் வழியிலே பெறுகின்ற குழந்தை செல்வமும் இன்று VOG களின் கைகளில் ஓர் விளம்பரமும் பணவேட்டையுமாக மாறியுள்ளது. எனினும் நோய்கள் பரிபூரணமாக தீர்ந்தபாடில்லை. இவ்வாறான மாய வலையில் மக்கள் சிக்கித் தவிக்கின்றனர்.

ஆரம்ப கால விளையாட்டு மரபுகள் தற்போது தெரியாமல் போன கலாசாரமாகவே மாறி வருகின்றது.பொல்லடி,சீனடி, மல்யுத்தம்,சிலம்பு,பைக்கீர் பைத் விளையாட்டு, றாபான் அடித்தல் என விளையாடி உறவுகளை வளர்த்து உடலியல்,உளவியல் ஆரோக்கியம் பேணிய மக்கள் தற்போது இலத்திரனியல் சமூக வலைத்தளங்களில் அடிமைப்பட்டுக் கிடக்கும் நிலைமை சாத்தியமாகியுள்ளது. இது ஒரு ஆரோக்கியமான சமூக உருவாக்கத்தின் சுவடல்ல என்பது ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட விடயமாகும்.

ஆரம்பகால திருமண நடைமுறைகள் செலவு அதிகரித்ததாகவும் மேலும் உறவுகளுக்கும் உறவினர்களுக்கும் அதீத முக்கியத்துவம் வழங்குவனவாகவும் காணப்பட்டன. எனினும் தற்கால நடைமுறைகள் பணத்தினை வீண்விரயம் செய்வது வெளிப்படையான ஓர் அம்சமாக காணப்படுகின்றது.பெண் அலங்காரம், சீதனம்,ஆடம்பரம் என விளம்பரத்திற்காக மக்கள் கடன்பட்டேனும் ஆடம்பரம் தேடும் மரபு உருவாகியுள்ளது.இது வங்கிகளின் எழுச்சிக்கும் காரணமாக அமைந்தாலும் தனிநபர்களையும் குடும்பத்தின் ஆண்மகன், பெண்களையும் திருமண வயதில் தள்ளிப்போட்டு சமூகத்தின் சீரான இயங்குகையை நிலைகுலைத்து வருகின்றது.

பெருநாட்களின் சிறப்புக்கள் ஆரம்பகாலங்களில் மனம்விட்டு, முகம்பார்த்துப்பேசி, உறவினர்களின் வீடுகளில் உண்டு கழித்து மகிழ்ந்த மரபானது பல்வேறு சமூக மாறுதல்களினால் இன்று வெறும் குறுஞ்செய்தி வாழ்த்தும் உறக்கமும் என உறைந்து விட்டிருப்பதனை நேர்காணல்களின் முடிவுகள் நிதர்சனப்படுத்துகின்றன.

பள்ளுப்பாடுதல் மரபானது இன்றுகளில் சுவடு அற ஒழிந்திருப்பதனைக் காணலாம். இதனால் இசை வல்லுனர்கள், மொழிப்புலமையாளர்கள், பாடகர்களின் திறமைகள் ஊர்மட்டத்தில் தெரியாமல் செய்யப்பட்டு திறமை மழுங்கடிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

பட்டப்பெயர் பண்பாடானது காலமாற்றத்துடன் அருகி வருகின்றது.இது குடும்பம், குலம்,கோத்திரம்,உறவினர்களை இணங்கான்பதற்குரிய இலகுவான நடைமுறையாகும். இதன் அருகி வரும் தன்மையானது புதிய தலைமுறையினருக்கு ஊரிலுள்ள பெரியவர்கள், குடும்பங்கள், அவர்களின் பொதுக் குணவியல்புகள் என்பவற்றை அவர்களின் பட்டப் பெயரை கொண்டே இலகுவாக அறிய முடியாது காணப்படுகின்றது. இவ்வாறே தாய்வழிக் குடி மரபு முறையானது சிறப்பாய பேணப்படாது போய் விடுவதனால் குடி மரபு அதன் வழி வந்த உறவுகள், உறவு முறைகள் தெரியாமல் போய் விடுகின்றன.

மேலும் விருத்த சேதனச் சடங்குகள் ஆரம்ப காலத்தில் ஒய்த்த மாமா என்பவரால் நிறைவேற்றப்பட்டது. அவை இன்று கைதேர்ந்த மருத்துவர்களால் நிறைவேற்றப்படுவது வரவேற்கத்தக்க அம்சமாகும்.மேலும் பெண்கள் பக்குவமடைதல்: அதாவது பூப்பெய்தல் மரபானது பெரும் விழாக்களாகக் கொண்டாடப்படும் தன்மை மாறி அவற்றை உறவினர்களுக்கும் வெளியில் கூறாது மறைத்துவிடும் தன்மை அதிகரித்து வருகின்றது. மார்க்க அறிஞர்கள் இதனை வரவேற்க்கத்தக்க நிகழ்வாகக் காண்கின்றனர். எனினும் சில பண்டைய கலாசார விரும்பிகள் இதனை விமர்சிக்கின்றனர்.

பொருளாதாரம் சார் பண்பாட்டு அம்சங்களில் விவசாயம் பாரிய பங்கினை வகிக்கின்றது. எனினும் வேளாண்மைக்காக தெளிக்கப்படுகின்ற கிருமி நாசினிகள், பீடைக் கொல்லிகள் என்பன முழு இலங்கை தேசத்தையும் தொற்றா நோய்களுக்கு இலக்காக்கி வருகின்றன. இதனால் நாட்ப்பட்ட சிறுநீரக நோய், புற்று நோய், நீரிழிவு என்பன அதிகரித்து வருகின்றன.உணவின் மூலம் சக்தி, ஆரோக்கியம் வேண்டப்படுவது மாறி தற்போது விளைவிக்கப்படுகின்ற உற்பத்தியினால் ஆரோக்கியம் கேள்விக்குறியாகி வருகின்றது.

சமயம் சார் பண்பாட்டு அம்சங்களில் மௌலித், தலைபாத்திஹா, கத்தம் என்பன அருகி வருவது மார்க்க அறிஞர்கள் சிலரால் வரவேற்கப்படுகின்றது. எனினும் இப்தார் எனும் நோன்பு துறப்பிக்கும் நிகழ்வானது மக்களால் விரும்பி ஏற்கப்படுகின்ற மரபானது சமூகவியலாளர்களாலும் சமயத் தலைவர்களினாலும் வரவேற்கப்படுகின்றது. என்றாலும் இதனால் மக்களின் ஒன்று கூடும் மரபு இல்லாமலாக்கப்படுகின்றது எனும் எண்ணம் இருக்கவே செய்கிறது. எது எவ்வாறு இருப்பினும் வழக்கொழிந்து செல்கின்ற கலாசார நிகழ்வுகள் மனிதனது ஆரோக்கியமான சமூக சூழலினை கேள்விக்குறியாக்கி வருவதனை இணங்காண முடிகின்றது.இதனைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

**விதந்துரைகள்**

ஒவ்வொரு சமூகமும் காலத்திற்கு காலம் நவீன மாற்றங்களைப் பெறுவது இயல்பாகும். அவை அச் சமூகத்தின் பண்பாடுகளில் வெளிப்பட்டு நிற்கின்றன. பண்பாட்டு நவீனமயமாக்கம் வரவேற்கத்தக்க விடயமாக அமைந்தாலும் அவை பாதகமான விளைவுகளை சமூகத்தில் ஏற்படுத்துகின்ற போது அந் நவீனத்துவ செயற்பாடானது வினைத்திறனற்ற ஒன்றாக மாறிவருகின்றது. எனவே, சமூத்தின் சுபீட்சமான எதிர்காலத்தை எண்ணி பின்வரும் விதந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

எமது பண்பாடுகள் மாறிவருவதனால் எமது சமூகத்தின் ஆரோக்கியம் இழந்து வருகின்றமையினை மக்கள் உணரும் வண்ணம் தகுந்த புலமை சார் நிபுணர்களினால் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டு அவை சமூக அரங்கில் விளக்கம் செய்யப்பட வேண்டும். இதன் மூலம் உறங்கிக் கிடக்கின்ற மக்களின் நனவு நிலையானது விழித்துக் கொள்ளும் தன்மை ஏற்பட வாய்ப்பு காணப்படுகின்றது.

ஒரு சமூகத்தின் தனித்துவமானது அந்த சமூகத்தின் பண்பாடுகளிலேயே தங்கிக் காணப்படுகின்றது. ஒரு சமூகம் தனது தனித்துவத்தை இழப்பது என்பது இறுதியில் அம் மக்கள் கூட்டம் பல்வேறு அசௌகரியங்களை சமூக சூழலில் எதிர்கொள்வதற்கு காரணமாக அமைந்து விடுகின்றது.எனவே, எம் முன்னோராலும் எமது சமூகத்தின் மூதாதையர்களாலும் எமது சமய, கலாசார நிகழ்வுகளாலும் ஈன்று எமக்கு கொடுக்கப்பட்ட பாரம்பரியங்களை அதன் வடிவில் பேணுவது பிரதானமானது என மக்கள் விளங்கும் வகை செய்தல் வேண்டும்.

பாரம்பரியமான பண்பாடுகளின் உள்ளார்ந்த தத்ரூபமான விழுமியங்கள் குறித்த தெளிவு இளைஞர் சமூதாயத்தினரிடம் காணப்படாமையே அவர்கள் பண்டைய பாரம்பரிய நடைமுறைகளை எள்ளி நகையாடுவதற்கு காரணமாகும். எனவே, பண்டைய காலத்திலிருந்து பின்பற்றப்படுகின்ற பாரம்பரிய நிகழ்வுகளின் பின்னணியில் உள்ள தத்ரூபமான விழுமியங்களை மக்களுக்கு உணர்த்துதல் வேண்டும்.

பாரம்பரியமான கலாசார உணவுகளை சமைத்து உண்பது என்பது தற்போது இயலாத ஓர் காரியமாக மாறி வருகின்றது.இன்றைய இறைஞர் சமூதாயத்தினருக்கு அவைகளை அவற்றிற்கேயுரிய முறையில் சமைத்து உண்பதும் தெரியாத ஓர் விடயமாக உள்ளது.சமைக்கும் முறைகள் தெரிந்தாலும் அதற்கான அவகாசமும் சந்தர்ப்பமும் நேரமும் கூட சில போது கிடைப்பதில்லை. எனவே, இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக பாரம்பரியம் பேணுகின்ற உணவுச் சாலைகளை பொது இடங்களினையும் நிறுவ முடியும்.

சமயம் எனும் சமூக நிறுவனத்தின் மூலம் மக்களுக்கு பல்வேறு விடயங்களை இலகுவாக விளக்கம் செய்ய முடியும். எனவே, சமயம் சார்பாக தடுக்கப்பட்ட பல்வேறு பண்பாட்டு அம்சங்கள் காணப்படுகின்றன.இவை தீவிரமான தௌஹீத் ஜமாஅத் போன்ற குழுவினரின் செயற்பாடுகளினால் விளைந்ததாகும். எனவே, மிதவாத போக்குடைய மார்க்க அறிஞர்கள் மார்க்க வரையறைக்குள் காணப்படும் பண்பாடுகளை இணங்கண்டு அதனை சமூகத்திற்கு எத்தி வைப்பதன் மூலமும் வினைத்திறனான விளைதிறன்களை எதிர்பார்க்கலாம்.

பாரம்பரியமான சில அருமையான நடைமுறைகள் அருகிக் காணப்படுவதற்கு அரச அங்கீகாரம் கிடைக்காது போவதும் ஓர் காரணமாகும். எனவே, பண்டைய வைத்திய முறைகள்,சுதேச வைத்திய சாலைகள் அந்தக் கலைகளில் கைதேர்ந்த சுதேச மக்களை கௌரவித்து அவர்களுக்கு ஓர் அங்கிகாரம் வழங்குவதன் மூலமும் அவற்றின் அருகுகையினை இழிவளவாக்கலாம். மேலும் அவற்றின் பக்கவிளைவற்ற தன்மையினை அரசு, அரசாங்க மட்டத்தில் பின்பற்ற வேண்டும்.

விளையாட்டுக்கள், சிறப்பு விழாக்கள் என்பன தற்போது எட்டாக் கனியாக மாறி வருகின்றது. விளையாட்டு களிப்புடன் வியர்வை சிந்துவதும் கானல் நீராக மாறியுள்ளது. எனவே, பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகங்களின் பாட விதானங்களில் விளையாட்டு குறித்த விழிப்பூட்டலையும் ஊக்கத்தையும் மக்களுக்கு வழங்குதல் வேண்டும். மேலும் ஊர் மட்டங்களில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல் வேண்டும். அதற்கான வெகுமதிகளையும் வழங்கி கௌரவிக்க வேண்டும்.

இன்றைய இளைஞர் சமூதாயத்தினருக்கு ஓர் விடயத்தை விளங்கப்படுத்த வேண்டும் எனின் அவர்களுக்கு முதியவர்களின் அறிவுரைகள் பயனளிப்பதில்லை. அவர்களுக்காக இலத்திரனியல் ஊடகங்களில் மூழ்குவதை விட உறவுகள், உறவினர்களின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் குறும்படம், நாடகம், நாவல் முதலியவற்றை வெளியிடுவதன் மூலம் சிறப்பான விளைவுகளை

எதிர்பார்க்கலாம். ஏனெனில் இன்றைய இளைஞர் சமூகம் அவற்றில் அதிக மோகம் கொண்டு காணப்படுகின்றனர்.

கவிபாடும் திறன் கொண்டவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மன்றங்களை உருவாக்கி அவர்களைப் பாராட்டி பரிசளிக்க முடியும். இதன் மூலம் அவர்களின் திறமைகள் மழுங்கடிக்கப்படாமல் பட்டை தீட்டப்படும். அதுமட்டுமில்லாது பண்டைய காலத்தில் மனிதர்கள் ஒன்றாக ஓரிடத்தில் கூடி பாடி மகிழ்ந்த நிகழ்வுகளும் சாத்தியமாகலாம்.அவை தற்போது நிலவுகின்ற மன அழுத்தம் முதலியவற்றுக்கு மருந்தாகவும் அமைந்து வருகின்றது.

எனவே, மேற்கண்டவற்றை தொகுத்து நோக்குகின்ற போது பாரம்பரிய பண்பாடுகளானவை அதன் தன்மையினை இழந்ததினால், சமூக சூழலில் ஏற்படுகின்ற பிரச்சினைகளும் சவால்களும் தோன்றியது என்பது புலனாகின்றன. மேலும் அவற்றினை குறைத்துக் கொள்வதற்கான விதந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும் சமூகத்தின் இயங்குகையினைப் பேணி வருகின்ற கலாசாரம், விழுமியம், பாரம்பரியம், பண்பாடு முதலியவற்றை குறைத்து மதிப்பிடாது அவற்றில் பொதிந்து காணப்படுகின்ற தத்துவார்த்த யதார்த்தங்களைப் புரிந்து செயற்படுவதன் மூலம் பண்பாட்டு நிலைமாற்றங்களினால் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளை தவிர்த்துக் கொள்ள முடியும்.

**References.**

1. Jameel,S,H,M. & Asiff Hussein.(2011).*The Muslim Heritage of Eastern Sri Lanka*. Muslim women research and action forum.Colombo.
2. Rehana sikry. (1999). *Women in Islamic culture and society*. ISBN. India.
3. Shushtery,A,A,A.. (1938). *outlines of Islamic Culture*. Babgore press. India.
4. Dr.Shukri,M,A,M.(1986).*Muslims Of Srilanka*. Jamia naleemia. Srilanka.
5. Sameem,A,M.(1997).*இலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிதாயங்கள்*. குமரன் வெளியீட்டகம். மெட்ராஸ்.
6. Saleem,A,R,M. (1992). *கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கல்யாணக் சடங்கு*.HIRAA. Akkaraipattu.
7. Jameel,S,H,M. (1997).*அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள்* . Ministry of culture and religious affairs. Srilanka.
8. Musthafa,S,H,M.(2014). *சரித்திரம் கூறும் சம்மாந்துறை*. கலாஅபிவிருத்திக் களகம். சம்மாந்துறை.
9. Ameen,M,I,M.(2009).*கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும்:* -1870-1915.islamic book house.colombo.
10. *Information about sammanthurai 2017*.Retrived from:http://lankainformation.lk/directory/seach-by/state?value=sammanthurai